[illegible]

[illegible]

T.D.R.C. 1987

R.R.No. 28-2-1974

J
M74

114848

Modern Agriculture.

AND

WHAT MODERN AGRICULTURE CAN DO FOR THE INDIAN FARMER;

BEING

A TAMIL TRANSLATION OF THE TWO LECTURES DELIVERED IN THE GOVERNMENT CENTRAL MUSEUM, MADRAS;

BY

WILLIAM R. ROBERTSON, ESQ., M. R. A. C.,

Superintendent, Government Farms.

1987



MADRAS:

Published by the

MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

1873.

COPY RIGHT.

Modern Agriculture.

AND

WHAT MODERN AGRICULTURE CAN DO FOR THE INDIAN FARMER;

BEING

A TAMIL TRANSLATION OF THE TWO LECTURES DELIVERED IN THE GOVERNMENT CENTRAL MUSEUM, MADRAS;

BY

WILLIAM R. ROBERTSON, ESQ., M. R. A. C.,

Superintendent, Government Farms.



MADRAS:

Published by the

MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

1873.

COPY RIGHT.

114848

Printed at the Christian Knowledge Society's Press,
No. 18, Church Street, Vepery.

நூதன விவசாயம்.

இஃது

துரைத்தனத்தார் பரீக்ஷைக்காக ஏற்படுத்திய

சைதாப்பேட்டை தோட்டத்தின் பயிர்விசாரணை நடாத்தும்,

டப்பில்யு. ஆர். ராபர்ட்ஸன் துரை

சென்னை விநோதவஸ்துசாலையில் செய்த

உபந்யாஸத்தின்

மொழிபெயர்ப்பு.

"ஏரைத்தேடி ஊரைத்தேடு." .... [ஔவை.]

"சுழன்றுமேர்ப்பின்ன துலகமதனா
லுழந்துமுழவே தலை" .... [குறள்.]

சென்னபட்டணம்:

இராஜதானிப் புத்தகசங்கத்தாரால்,
கிறிஸ்துமார்க்க கல்வி அபிவிர்த்தி சங்கத்தாராகிய
மதிராஸ் டையோசிசன் கம்மிட்டியாரது அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

௧௮௭௬.

நூதன விவசாயம்.

I.

ஏறக்குறைய போன நூற்றாண்டின் நடுவரையில் விவசாயத்தொழில் எத்தேசத்திலும் ஏகஸ்திதியிலேயே இருந்தது. அநேக நூற்றாண்டுகளாய் நடந்தேறிவந்த வழக்கங்களைச் சீர்படுத்த முயன்ற தேசத்தை எங்குங் காணோம். இக்காலத்தில் இந்துதேசத்தில் நடந்துவரும் விவசாயமுறையைவிட அக்காலத்தில் பிரிட்டிஷ்தீவுகளிலும் ஐரோப்பாக்கண்டத்தின் மேற்புறதேசங்களிலும் வழங்கிவந்த விவசாயம் சிரேஷ்டந்தான். ஆகினும் இப்போது இந்தத் தேசத்தில் எப்படியோ அப்படியே குடித்தனக்காரன் தொழில்களுக்கு அங்கும், வழக்கம் மாமூல் என்னும் பந்தங்களிருந்தன. இன்னமாதிரி விளைவுக்குப் பூமியை இத்தனை தடவை அடித்து உழவேண்டுமென்றும் [illegible] இன்னின்ன சுபக்குறிகள் இருந்தால்தான் விளைவுவலாமென்றும் நிர்ப்பந்தங்கள் எங்குமுண்டு; ஏருப்போடுவதரிது. அப்படிப் போட்டாலும் பலமுறை மழை பெய்வதாலும், மற்றும் சில இடையூறுகளாலும் ஏறக்குறைய உதவியற்றுக் கிடக்கும் நிலத்துக்கே போடுவார்கள். பூமியைப் பண்படுத்தும்பொருட்டு அப்போதிருந்த கருவிமுறைகளெல்லாம் மோட்டாந்தரமாயும் பார்க்க வழங்காமலுமிருந்தன. இத்தனை குறைவிருந்தும் விளையும் விளைச்சல் ஒவ்வொரு தேசத்திலும் சாதாரணமாய் வேண்டுமளவிற்குப் போதுமானதாயிருந்தது. இக்காலத்தைப்போல் அக்காலத்தில் ஜனஅடர்த்தியில்லை. விளைவிற்குமேல் செல்லாகிறதற்குச் சண்டை, கருப்பு, கொள்ளைநோய் இவைகள் இடங்கொடுக்கவில்லை. கைத்தொழிலுள்ள பெரிய கஸ்பா நகரங்கள் இன்மையால் விஸ்தாரமான நிலத்தில் உண்டாகும் விளைவு மடியவிடமில்லை. உண்மையாய் அந்தக்காலத்தில் சரக்கெடுப்புக்குள்ள சாதனங்கள் மிகக்குறைவாதலால், இக்காலத்தில் நாமிருக்குமிடத்திற்கு உண்ணும் பதார்த்தங்கள் வருவதுபோலன்றி ஜனங்கள் உணவுதேடிப் போகும்படியிருந்தது. தேசத்தில் கொழுமையான இடங்களிலேயே ஜனங்கள் அடர, சற்று பீடான இடங்கள் பாழாய்க்கிடந்தன. அக்காலம் விவசாயத்தொழில் வருத்தமின்றி நடக்குங்காலம். விளையத்தக்க நிலமே

பயிரிட்டால் அதைச் சுற்றிலுமுள்ள ஜனங்களுக்குச் சாதாரணமாய் அங்கு விளையும் தானியமே போதுமானதாயிருந்தது. ஆனால் இப்போது அப்படியாகுமா, நிலைமாறிவிட்டது. நாகரிகமுள்ள எல்லாத் தேசங்களிலும் ஜனத்தொகை விஸ்தாரமேறியது. உலகத்தில் எங்கெங்கு நாகரிகம் விர்த்தியாயிருக்கிறதோ அங்கெல்லாம் காருகத்தொழில் விறுவிறென்று விர்த்தியாய்ச் சுற்றுமிருக்கும் விளைநிலங்களின் தாரதம்மியத்தைப் பாராமல் அங்கங்கே புதிய கஸ்பாநகரங்கள் ஏற்பட்டன. இந்த ஏதுக்களால் விவசாயத்தொழிலுக்குப் பலவழிகளால் மாறுதல் உண்டாயிற்று. முக்கியமாய் அதிக விளைவைத்தரும் முயற்சிகள் தேடப்பட்டன. ஜனங்கள் புதியதேசங்கள் தேடிப்போனார்கள். முன், பண்ணைக்குதவாதென்று கைவிட்ட பூமியெல்லாம் இப்பொழுது வெகுவாய்ப் பயிரிடப்பட்டது. இந்த ஏதுக்களாலே விளைவு குன்றும்படியான காரியமும் சம்பவித்தது. ஓரிடத்திலுள்ள ஜனங்களுக்குமாத்திரம் செல்லும் உணவுக்குப் பற்றும்படி கொழுமையுள்ள நிலம், விவசாயத்தொழில் செய்யாமல் கைத்தொழில்மாத்திரம் அநுசரிக்கும் ஜனங்களுக்கு உணவு கொடுக்கக் கொடுக்க வளப்பம் குறைந்துகொண்டேவந்தது. பூமிவழியாயும் ஜலவழியாயும் பதார்த்தங்கள் எடுப்பித்துப்போகும் அநுகூலங்கள் விஸ்தாரமாகவாக விளைந்த இடத்திலேயே மக்கிமடிந்து பூமியின் கொழுமையைப் போக்காத பதார்த்தமெல்லாம் எடுபட்டுப்போவதினாலும் பூமியின் வளப்பம் குறையும். இந்த நூற்றாண்டின் ஆதிமுதல் காருகத்தொழில் நடந்தேறிவந்த அபிவிர்த்தி அநேக நாடுகளில், விசேஷமாய் நம்முடைய தேசத்தில் நீராவியின் உதவியால் அத்தியாச்சரியவிதமாய் விர்த்தியடைந்தபடியால் விவசாயத்தொழில் [illegible] நடக்கும் ஏற்பாடுகளெல்லாம் அடியோடு எடுபட்டுப்போயின. இந்தத் தேசத்தில் முன்பின் யோசியாமல் நாம் அயலான் பணத்துக்குத் தானியத்தை அளந்துகொடுத்து நம்தொழிலுக்குவேண்டிய கையிருப்பையும் பெரும்பாலும் இழந்துவிடுகிறோம். கையிருப்பை இழத்தலாவது நமது விளைச்சலுக்கு அவசியமான பதார்த்தத்தை நமது பூமியிலிருந்து எடுத்து ஏற்றுமதி செய்துவிடுவதாம். நமது பஞ்சென்ன, கோதுமையென்ன, புகையிலையென்ன, மற்றுமுள்ள பதார்த்தங்களென்ன, இவைகளெல்லாம் விற்கும்போது நமது பூமியிலிருக்கும் சவட்டுமண், சுக்கான்மண் முதலிய கொழுமைக்கேதுவான பதார்த்தங்களும் எடுபட்டுப்போகின்றனவல்லவா? ஏற்றுமதிசெய்யும் ஒவ்வொரு தேசத்திலும் யோசனையில்லாமற் செய்வதால் இழவு சம்பவிக்குமென்பதை நேராய் உணரும் காலமும் வரும். ஐரோப்பாக் கண்டத்தில் தானிய ஏற்றுமதிசெய்யும் பெரிய தேசத்தாரெல்லாம் இவ்வுண்மையையறிந்தே இருக்கிறார்கள். இந்த ஏற்றுமதி வர்த்தகம் உண்டாகும் காலத்தில் விசேஷ கோதுமைவிளைவுள்ள நிலங்கள் இப்பொழுது பூடு பாதியாயும், சிலவிடங்களில் அதிலும் குறைந்தும்போயின.

ருஷியாவின் தென்புறத்தில் முதல்தரம் கொழுமையுள்ள நிலங்களில் முன்பு நாற்பதுகலம் (Bushel) கண்டு முதலுக்கு இப்பொழுது பதினெட்டாய் இறங்கிற்று. போலாண்டில் விளைவு இதிலும் பீடு. டான்விக்கு மாகாணத்தில் பதினாலேகலம். அமெரிக்காகண்டத்தின் ஐக்கியநாடுகளில் இந்த ஹானி தேடிக்கொள்ளும் முறையை அநுசரித்து இம்மாதிரி பயனை விளைந்தது. நியூயார்க்கு மாகாணத்தில் 80 வருஷத்திற்கு முன்னேதான் ஏக்ராவுக்குச் சராசரி 24 கலம் விளைந்தது. இப்போது 15 கலமாய் முடங்கிற்று. வர்ஜினியா மாகாணத்தில் உலகத்தில் முதல்தரம் கொழுமையுள்ள பூமியென்று பேர்போன உழவுநிலங்கள் நூறுவருஷகாலத்துக்குள் ஏக்ராவுக்கு எட்டுக்கலத்தில் இறங்கியது. வருஷந்தோறும் ஏற்றுமதிக்காக பஞ்சு, புகையிலை, சோளம் இவைகளைப் பயிரிட்டு பதில் எருவென்பதே போடாதிருப்பதுதான் இந்தப் படுபாட்டுக்குக் காரணம். அமெரிக்காகண்டத்தின் கீழ்பாகத்திலுள்ள உழவாளி கைவிட்டுப் பாழ்படவிட்ட ஆயிரக்கணக்காயுள்ள ஏக்ராக்கள் பீடடைந்ததற்கும் இதுவே காரணம். அங்கு குடியேறின மனிதன் கீழ்ப்புறத்திலிருந்து நிலம் விளைவு குன்றக்குன்ற மேல்நிலத்தைப் பயிரிட்டுக்கொண்டே போகிறான்.

அமெரிக்கா துரைத்தனத்தாரோ இப்படிக் கைவிட்ட நிலத்தை இன்னது செய்வதென்றறியாமல் குழம்புகிறார்கள். எடுபட்ட சத்துக்குப் பதில் சேர்த்து நிலத்தை முன்போல் கொழுமைசெய்ய முயலலாமென்றாலோ அதற்குப் பிடிக்கும் செலவு சீர்ப்பட்டபின்னும் அந்நிலமெடுக்கும் கிரயத்தை மிஞ்சும். அமெரிக்காவிலென்ன, விளைவெடுபட்டுப்போகிற எல்லாத் தேசத்திலும் [illegible] இப்படித்தான். சத்து குறையக்குறைய [illegible] ஈடுசெய்ய முயலாதவனாயில் பயிரிடும் உழைப்புக்குத்தக்க பலனடையக்கூடாத காலமும் வரவேவரும். அப்பொழுது நிலத்தைப் பாழ்படவிடவேண்டும், அல்லது விஸ்தாரம் செலவுசெய்து முன்னிருந்த நிலைக்குக் கொண்டுவரவேண்டும்.

இதுநிற்க இன்று சாயந்தரம் நான் முக்கியமாய்ச் சொல்லவந்த விஷயம் நவீன விவசாயமுறையைப்பற்றி. சென்ற முப்பதுவருஷகாலமாய்த்தான் நவீன விவசாயத்துக்கு அடிப்படையாயுள்ள சித்தாந்தங்களை ஒருவாறு நிஜமாயநுசரித்து விவசாயம் நடத்துகிறார்கள். இப்படி நடக்கும் விவசாயமும் வெகு சொற்ப இடத்தில்தான் என்று சொல்ல எனக்கு விசனமாயிருக்கிறது. இந்த முறையின் பிரபாவத்தை உணர்ந்த தேசம் இன்னுமரிது.

நாகரிகமுள்ள யூரோப்கண்டத்திலேயே விஸ்தார நிலங்களைப் பயிர் செய்யும் [illegible] விவசாயத்தால் [illegible] உணவு தேடிக்கொள்வதே கஷ்டமாய்ப்போகிறது. இங்கேமாத்திரமென்ன! எல்

லாத் தேசங்களிலும் தப்பு விவசாயமுறையே சாதாரணம். எங்கே[illegible]ா ஓரிடத்தில் நல்லமுறை வழங்குகிறது. நவீன விவசாயத்தை வர்த்தகப்பண்ணையென்று சொல்வார்கள். எனக்கோ வர்த்தகமென்னும் மொழி இஷ்டமல்ல. அதற்கு அர்த்தம் விரிவில்லை. அமெரிக்காவில் குடியேறினவனுடைய பாழ்படுத்தும் முறையை வர்த்தகமுறையென்னலாம். அவன் பயிரிட்ட நிலத்தைப் பாழ்போட்டு புதுநிலம் தேடிக்கொண்டே போவதினால், முன் பயிரிட்ட நிலத்தையே பயிரிடுவதைவிட அதிக பலன் பெறுதலால் அவனுக்கு வைத்த முதலுக்கு நூற்றுக்கு விகிதம் அதிகம் வரக்கூடும். [illegible] நல்ல [illegible] தேசத்தில் இப்படிப் பாழ்பண்ணவாய்க்காது. ஐக்கியநாடுகளில்கூட பயிரிடாத நிலங்கள் கோடிகோடி ஏக்ராவாகக் கிடந்தபோதிலும் இந்தப் பாழ்போடும்முறை நிந்திக்கத்தக்கதே. எப்படியிருந்தாலும் முன்பின் யோசியாமல் நிலத்தைப் பாழ்பண்ணுதல் அநியாயம்.

லோபமுள்ள வர்த்தகசித்தாந்தத்தை அநுசரிப்பவருக்கு இந்த யுக்தி சரியாக, பழுதில்லாததாகத் தோனலாம். நானோ வர்த்தகப்பண்ணை என்பதற்குப் பதிலாய் யுக்தவிவசாயமென்னும் மொழியை வழங்குவேன். இந்த நவீன விவசாயமுறையை யுக்தமென்று சொல்வதேனென்றால், பூமியின் கொழுமை குன்றாமலிருக்க அதிலின்று எடுபடும் தாதுதிரவியங்களுக்குப் பதில் எருவிட்டுத் தேற்றவும்; சாஸ்திரநிபுணர்கள் நூதனமாகக் காணும் சித்தாந்தங்களையொட்டி நடத்த அநுகூலப்படவும், இம்முறைப்படி விவசாயம் செய்பவர்கள் அதற்கென்று கற்றுப் பழகவேண்டுவதும், சர்க்கார் ஆதரவின்றி வர்த்தகம் தானாய்ப் பலித்துவருவதும் அவசியமாயிருப்பதினால்தான். இந்த நவீன விவசாயமுறையின் முதலேற்பாடு ஸ்ரீ. ஜெரா. டேல், [illegible] லிங்காஸ்ட், லீபிக், ஜான்ஸ்டன், வொல்கர், லவ்ஸ், கில்பர்ட் முதலானவர்களின் முயற்சியினாலும், அதன் சில்லறை நுணுக்குகள், வி. ஜெ. லின்க்னோர், ஆ. எங்க், கேர்ட், மிட்ஸி, மார்டன், கோல்மான் இன்னுமிவர்கள்போல் திறங்கொண்ட மகா பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனிமுதலிய தேசங்களில் ஆங்காங்கு குடியிருந்து பிரசித்திக்குவராத மற்றும் அநேக குடித்தனக்காரர்களாலும் ஏற்பாடுசெய்யப்பட்டன.

இந்த நவீன விவசாயமுறையின் நோக்கமெல்லாம் பூமியின் விளைவு சக்தியைச் சீர்ப்படுத்துவதேயாம். பூமியில் எருப்போடாமல் இடைவிடாமல் பயிரிட்டால் வரவர விளைவுகுன்றி கடைசியில் பட்டபாட்டுக்கு ஈடுகொடாமல்போகுமென்றும், இந்தமாதிரி வெகுநாளாய்ப் பயிரிட்டுவந்த தேசங்களிலெல்லாம் நிலத்துக்கு விளையும் சக்தி குறைந்திருப்பதே இதற்கு அத்தாக்ஷியென்றும் இந்த நவீனமுறை நமக்குக் காட்டுகின்றது. மேலும் இந்த முறையின் சித்தாந்தப்படி விவேகத்தோடு பயிர்த்தொழில்செய்யும் இடங்களிலெல்லாம் கண்டுமுதல் இரட்டிக்கிரட்டி உண்டென்பதற்கு அநேக திருஷ்-

டாந்தங்களை அது நமக்கு உணர்த்துகின்றது. இந்த நவீன விவசாயமுறை நாளுக்குநாள் விர்த்தியாகும் சாஸ்திரம். புது சங்கதிகளைச் சேர்த்து எப்போதும் அநுமானத்தைத் துறந்து ருஜுவான கொள்கையைக் கைக்கொண்டு பயனில்லையென்று ருஜுவானதைத்தள்ளி உண்மையென்று அநுபவத்தால் ருஜுவானதைக் கைக்கொள்வது இந்தச் சாஸ்திரத்தின் நோக்கம். இது சாஸ்திரத்தையும் அநுபவத்தையும் இணக்கி விளைந்தபொருளின் செலவுக்குச் சரியாக விளைவைத்தூக்கி உற்பத்தியும், வியமும் சரிகட்ட முயல்வது இதன் கொள்கை. இந்த நவீனமுறையைக் கைக்கொண்டு விவசாயம் நடத்துபவன் அதைக் கற்றுப் பூரணமாய்ப் பழகவேண்டும். முற்காலத்தின் குடியானவன் வழக்கப்படி, தங்கள் தொழிலை மேலெழுந்தவாரா சேர்வது போதாது. இதைசேர, ரசாயனம், ஜீவதத்துவம், ஔஷதிசாஸ்திரம், கணிதம், இருஷ்டிவர்க்கவிசாரம், அசுவவைத்தியம்முதலிய விஷயங்களில் ஞானம்வேண்டும். வைத்தியத்திலும், தர்மசாஸ்திரத்திலும், தொழிலிலும் பிரவேசிப்பவனுக்கு அதன் மூலதத்துவங்கள் எப்படி அவசியமோ அப்படியே விவசாயத்தொழிலில் பிரவேசித்துச் சித்திபெற எண்ணுபவனுக்கும் அம்முறையின் மூலதத்துவங்களை அறிவது அவசியமே. சரக்குகளைக் கொண்டுபோகும் சாதனங்கள் அதிகப்படப்பட, ஏற்றுக்கூலி குறையக்குறைய, எல்லாத்தேசத்துப் பயிரிடுங்குடிகளுக்குள்ளும் வரவரப் போட்டியுண்டாகும். எந்த யுக்திகளாலும் இந்தப் போட்டியைத் தப்புவது அஸாத்தியம். இதனால் குடித்தனக்காரன் தெளிந்துகொள்ளவேண்டியதென்னவென்றால், தன்னிலத்தின் விளையும் சக்தியை விர்த்திசெய்து விளைபொருளை இருமடங்கு நான்மடங்காக்கி வாரத்திலும் பண்ணையிலும் பிடிக்கும் செலவை அரைவாசி கால்வாசி குறைத்தால்தான் இந்தப் போட்டிக்குத் தப்ப வழியுண்டு. இந்த நவீன விவசாயமுறையின் நோக்கம் பூமியின் விளைசக்தியை விர்த்திசெய்வதென்று முன்னமே சொன்னேனே. எவ்வளவுக்கெவ்வளவு நிலம் நன்றாகப் பண்படுத்தப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு எல்லாஜனங்களுக்கும் சுகம். வரி அதிகக்கிரமமாய் வருலாகும். குடித்தனக்காரன் வரும்படி முன்னையப்போல் அத்தனை [illegible] இராது. படியாளுக்கு முன்னையக்காட்டிலும் நல்ல கூலியும் கூழுமுண்டு. சாதாரண ஜனங்களுக்கோ மலிவான ஆகாரங்கிடைக்கும். குடித்தனக்காரனுக்கு வரும் நஷ்டம் சர்வஜனத்துக்கும் வரும் நஷ்டம். புகைவண்டித்துறையில், கிறிமாற்றுமுதலிய வியாபாரங்களில் ஒருவனுடைய நஷ்டம் மற்றொருவனுடைய லாபம். அதிவிருஷ்டி அனாவிருஷ்டியால் காலம் பேதமானாலோ விளையும் ஆகாரம் குறைவுபடும், விலையேறும். இப்படி வரும் நஷ்டத்துக்கீடாக ஒருவனுக்காவது லாபம் வருகிறதில்லை. ஆதலால் குடித்தனக்காரன் தன் முதலைக்கொண்டு ஜீவிக்கவேண்டும். நஷ்டத்தால் அவனுக்குவரும் கேடு எல்லாரையும் பிடிக்கும். விவசாயத்துக்கு

வேண்டிய முதலில் நாலிலொருபங்குகூட மற்றத் தொழிலுக்கு வேண்டுவதில்லை. விவசாயத்தொழிலில் வைத்தமுதலுக்கும் பட்டபாட்டுக்குந் தகுந்த லாபம் வராமல்போனால் தேசத்திற்கு க்ஷேமமில்லை. அவன் முதல் வேறுதுறைகளில் பாயும். அதினால் எல்லாருக்கும் நஷ்டம். விவசாயத் தொழிலில் வரும் நஷ்டத்தால் தேசத்தில் ஜனவாழ்க்கை, நல்லொழுக்கம், ராஜநீதி இவைகளுக்கெல்லாம் ஹானியுண்டாகும். ஒரு தேசத்தாருக்கு மூலதனம் அவர்களுடைய தேகவலிமையும் மனோசக்தியும். ஒரு தேசத்தார் எத்தனை பெருகி தக்கபலந்தரும் வியாபாரவழிகளுள்ளவர்களாய் ஒன்றுபட்டிருக்கிறார்களோ அத்தனைக்கு அவர்கள் தனவான்களாவார்கள். யுக்தப்படி அநுசரிக்கும் விவசாயத்தொழிலானது இத்தன்மையான ஐக்கியநிலையை அவர்களுக்கு எப்போதும் தரும். விவேக பூர்வகமாக நடக்கும் விவசாயத்தொழிலே ஜனங்களுக்கு உடையும் ஊணும் கொடுக்கும். சீர்படும் விவசாயம் ஒரு தேசத்தின் மூலதனத்தை ஸ்திரமாக விர்த்திசெய்யும். இந்தத் தேசமெல்லாம் என் இப்படி தரித்திரம் குடிகொண்டிருக்கிறது? கையசைவற்ற குடித்தனக்காரர்களும் கஞ்சிக்கழும்படியாட்களுமாயிருப்பானேன்? பயிர்த்தொழிலுக்குவேண்டிய செலவு சிற்றுயங்கள் சொற்பம். சில துக்குடிகளே அங்குள்ளாரதிஷ்டம். விளைந்தபொருளைக் கொண்டுபோகும் சாதகங்கள் இல்லாமையால் கூடிய அளவு செழிப்பாகவேயிருக்கின்றன. இவ்விடங்களில் காலபேதகங்களும் யூரோப்கண்டத்துச் சில தேசங்களைப்போல் அத்தனையாக இருந்தாப்போலிருந்து மாறுகிறதில்லை. இப்படியிருந்தும் பஞ்சம் எட்டிப்பார்த்தவண்ணமாயிருக்கவில்லையா? அடுத்து இரண்டுமுறைகாலம் பிரதிகூலமானால் குடித்தனக்காரர்களுக்குள் எல்லாம் படுபாடும், பண்ணையாள் வீடுகளிலெல்லாம் பஞ்சமும் பரவாதா? குடித்தனக்காரர்கள் திவாலெடுக்காமலிருக்கலாம்: சிறுகுடித்தனக்காரன் அறக்கெடுவது அரிது.

காலம் பிரதிகூலித்தால் அவனுக்குக் கைமுதல்தான் துணை. புஷ்டிக் குறைவுள்ள, அல்லது மட்டபோஜனத்தையுண்டு அவன் சாதாரணமாய்த் தின்னும் தானியத்தை விற்பான். ஆண் பெண் அடங்கலும் குறைய உண்டு கடியவேலை செய்வார்கள். வர்த்தகம் படுத்துப்போவது திடீலென்று உண்டாகும். ஆனால் முழுமோசமாவது அரிது. விவசாயத்தில் சேதம் படிப்படியாய் வரும். முழுக்கப்படுத்ததோ எழுந்திருப்பதில்லை. முதலும்போம் நாணயமும்போம். திவாலெடுக்கும் ஸ்திதியிலிருக்கும் விவசாய ஜனங்கள் காலம் சுமாராயிருக்கிறவரையில் தள்ளிக்கொண்டே வருவார்கள். ஆனால் ஒருமுறை வானம் சுருங்கிற்றோ அவர்கள் கதி அதோகதிதான்.

காலம் பிரதிகூலித்தால் விவசாயத்துக்கு நஷ்டம் உண்டாகும் என்பதை நான் பூரணமாய் ஒத்துக்கொள்ளுகிறேன். இப்போதான் போனவரு

ஷம் பிரிட்டிஷ் தீவுகளில் கொடிய பிரதிகூலகாலம் நேரிட்டது. அதினால் ஸ்காட்லாண்டில்மாத்திரம் நேரிட்ட நஷ்டம் ஆறுமிலியன் பவுனுக்கு மேலுள்ளதென்று கணக்குப் பார்க்கிறார்கள். உலகத்திலிருக்கும் எல்லாத் தேசங்களிலும் பயிர்த்தொழிலிற் சிறந்த ஆடிங்கட்ன் மாகாணத்தில் 1872-ம் வருஷத்திய சாகுபடியில் வந்த நஷ்டம் 3 லக்ஷம் பவுனென்று மதிப்பிடுகிறார்கள். இன்னும் பாருங்கள், கிழ்லோதியன் மாகாண குடித்தனக்காரர் சங்கத்தார் இப்பொழுதுதான் கொஞ்சகாலத்துக்குமுன் சேர்ந்த கூட்டத்தில் பிரபுக்கள் பலர், போனமுறையில் தங்கள் விளைவு வித்துக்கும் எருவுக்குமே ஈடுகட்டினதென்று சொன்னார்கள். அந்த மாகாணத்தின் முகாமையாயிருப்பவர்களுக்கு இந்த விபத்து விபத்துதான். ஆகிலும் அவர்கள் சீக்கிரம் தலையெடுப்பார்கள். இந்த நவீனமுறைக்கு விழுந்தாலும் எழுந்திருக்கும் சக்தி உண்டென்பதற்கு உதாரணமாக சுமார் பத்துவருஷத்திற்குமுன் கிரேட் பிரிட்டனில் சடுதியிலுண்டான காலிகெக்கையை உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன். அதனால் இரண்டு மிலியன் பவுனுக்கு மேற்பட்ட விலையுள்ள ஜீவதனம் மடிந்தது. ஆகிலும் இந்த நஷ்டம் விவசாய விர்த்தியை எவ்வளவும் தகையவில்லை. விவசாயத்துக்கு காலபேதத்தாலும் வியாதியினாலும் நஷ்டம் எப்போதும் நேரிடும். சாஸ்திரமும் சாமர்த்தியமும் இது வராமல் காவா. ஆனால் சாஸ்திரமும் சாமர்த்தியமும் அதனால் வரும் கெடுதிகளை வெகுவாய்த் தணிக்கும். இப்போது பாருங்கள், நன்றாய் உழுது தகுந்த எருவிட்டுத் தண்ணீர்ப்பாய்ச்சிப் பாடுபட்டால், பிரதிகூலகாலத்தில் விளைச்சலைக் காப்பாற்றலாம். சுகத்துக்கடுத்த காரியங்களை ஜாக்கிரதையாய்க் கவனித்துப்பார்த்தால் திடீலென்றுண்டாகும் வியாதியின் வேகத்தைத் தணிக்கலாம்.

நன்றாய்ப் பண்படுத்தித் தக்க எருப்போட்டுத் தண்ணீர்ப்பாய்ச்சல் முதலிய காரியங்களைச் சீராய்ச்செய்தால் காலந்தப்பின காலத்தில் சாகுபடியாகாமல் விலக்கலாம். சுகாதாரவிஷயங்களைத் தக்க கவனம்வைத்து முன்சாக்கிரதைப்பட்டால் உண்டாகும் வியாதியின் வேகத்தையாற்றலாம். நவீனமுறைப்படி பயிர்செய்யும் குடியானவனுடைய கன்றுகாலிகளில் வியாதி உண்டாவது அரிது. சில வருஷகாலமாய் இங்கிலாண்டில் கனசேதத்தையுண்டாக்கிவரும் வியாதிகளில் பெரும்பாலும் பழையமுறைப்படி விவசாயத்தொழில் நடந்துவரும் தேசங்களிலுண்டாய் இங்குவந்த சரக்குகள் மேல்கண்ட ஆட்டுமொட்டின் கொள்ளைநோய் ருஷியாவிலிருந்து இங்கிலாண்டிற்குப் பிடித்துவந்த மந்தையில் தொத்திவந்ததென்று நேராய்க் கண்டறியப்பட்டது. ஸ்காட்லண்டில் காலவித்தியாசத்தால் நேரிட்ட நஷ்டம் கடுநஷ்டம்தான். அதைத் தேசத்துக்கே வந்த பெருங்கேடென்று சொல்லலாம். ஆகிலும் அந்த நஷ்டத்தைப் போனவருஷம் மகா பிரிட்டானியாவில் விளைந்த சாகுபடி மதிப்புடன் ஒத்துப்பார்த்தால் அது ஒரு

நஷ்டமாய்த் தோன்றுது. நூற்றுக்கு விகிதம் அதிசொல்பம். ஆடுமாடுகளில் வந்த கொள்ளைநோய்களினுல் வந்த நஷ்டத்தைப்பார்த்தால், அந்நோய் கிளம்பினகாலத்தில் மகா பிரிட்டானியாவிலுள்ள ஜீவதனத்தின் மொத்தமதிப்புக்குச் சேந்தமதிப்பு நாற்றுக்குக் கால்விகிதம் கூடவில்லை. இப்படிப்பட்ட நஷ்டங்கள் ஏழைப் பயிர்த்தொழிலுள்ள தேசங்களில் நேரிட்டால் அந்தேசமுழுமையும் திவாலெடுத்துப்போம். சம்பத்துள்ள விவசாயக்காரருள்ள தேசத்திலோ இந்த நஷ்டம் நஷ்டமாய்த் தோன்றுது. லோதியா மாகாணத்தின் விவசாயத்தைப்பற்றி சற்றுமுன் உங்களுக்குக் குறிப்பித்தேனல்லவா? அந்தப் பேர்போன தேசப்பகுதியில் பண்ணைவிர்த்தியைப்பற்றி ஒரு தாரணம் எடுத்துக்காட்டுகிறேன். இந்த விஷயம் சொற்பகாலத்திற்குமுன் 'லண்டன் ஸ்டாண்டர்ட்' என்னும் பத்திரிகைக்கு எழுதுமொருவர் சொல்லியவை:—"(Dunbough) டன்போ கிராமத்தின் சமீபத்தில் ஸ்காட்லண்ட் தேசத்து வாரக்குடி ஒருத்தனை சிலநாளைக்குமுன் போய்க் கண்டேன். அவனது குடித்தன விருத்தாந்தத்தைச் சொன்னுல், பூமியைச் சீர்ப்படுத்த ஐர்லாண்டுதேசத்து வாரக்குடிகளுக்குள்ள அனுகூல பிரதிகூலங்களைப்பற்றிச் சிறிது சங்கதி வெளிப்படும். தாக்குத்தொகையாய் இவனது குடித்தனநிலம் நானூறு ஏக்ராவுள்ளது. அதன்பேரில் அவன் தற்காலத்தில் கொடுக்கும் வரி ஏக்ராவுக்கு நாலுபவுன். அதாவது, மொத்தத்தில் வருஷவாரி ஆயிரத்து அறுநூறுபவுன். தொண்ணூறு வருஷத்துக்கு முன்னே இந்த நிலத்தை இவனது பாட்டனர் வருஷத்துக்குத் தொண்ணூறு பவுன் மேனிக்கு பத்தொன்பது வருஷகெடுவுக்கு ஒப்படைப்பட்டா வாங்கிக்கொண்டார். பத்தொன்பது பத்தொன்பது வருஷத்துக்கு ஒருதரம் நிலமிராசுதாரன் மனுஷியன் போய்ப் புதிதாய் தோகம்போட்டு ஒப்படைத்துவருவான். இதுவரையில் அந்த ஒப்படைக்கெடுவு பத்தொன்பது வருஷத்துக்கு மிஞ்சாமல் அந்தப் பத்தொன்பது வருஷத்தில் என்னென்ன சீர்மைப்பாடு நிலம் பெற்றிருந்ததோ அதுமேனிக்குப் பொறுமதிப்பிட்டு அடைக்கப்பட்டுவந்தது. இப்போது இந்த நிலத்துக்கு வருஷவாரி ஆயிரத்து அறுநூறு பவுன் ஆயிருக்கிறது. காளோத்தினம் குத்தகை ஒழிந்தாலும் இந்த வரி பூராயெடுக்கும். கட்டிடங்களுக்காக நிலத்துக்கு எஜமானன் அப்போதப்போது முன்பணம் கொடுப்பதுண்டு. ஆனல் அப்படிக்கொடுத்த பணத்துக்கு வாரக்குடிகள் உயர்ந்தவட்டி கட்டிக்கொடுத்துவந்தார்கள். இதுவுந்தவிர அந்தக் கட்டிடங்களுக்கு வேண்டிய சாமானும் தாங்களே வண்டியில் எடுப்பித்துக்கொண்டார்கள். அவர்கள் முதல்முதல் இந்த நிலத்தை ஒப்புக்கொண்டபோது அது புனல்மண்டிக்கிடந்தது. இப்பவோ லோதியன் மாகாணங்களுக்குள் நேர்த்தியான செய்களில் இதுவும் ஒன்று. இருதரத்தாரும் திர்ப்தியாயிருக்கிறார்கள். நிலத்துக்குச் சொந்தக்காரன் வரி தொண்ணூறு பவுனிலிருந்து ஆயிரத்து அறுநூறு

பவுன் ஆயிருக்கிறது கண்டு களிப்புற்றுன். வாரக்குடிகளோ தங்கள் மதிப்பின்படி சரம்புபட்டுக்கிடந்த நாளில் தொண்ணூறு பவுன்முதல் முதல்தரம் செய்யாக்கி ஆயிரத்து அறுநூறுபவுன் வரியேறியும், தங்கள் மூலதனம் அந்த மேரைக்கு விர்த்தியாயிருந்ததைக்கண்டு சந்தோஷப்பட்டிருக்கிறார்கள். நிலத்துக்குச் சொந்தக்காரனுக்கும் அவர்களுக்கும் யாதொரு இழுப்புப்பறிப்புமில்லை. இதற்குத் திர்ஷ்டாந்தம்: போன நியமனகாலத்தில் அவனுக்கு விரோதமாயே அபிப்பிராயம் கொடுத்தார்கள்." மேல் கண்ட உதாரணம் நல்ல முறைப்படி விவசாயம் நடத்தினுல் இன்ன பலன் கைகூடிவருமென்று காட்ட நல்ல திர்ஷ்டாந்தம். இந்த நிலத்தைப்பற்றிச் சொன்னதுதான் இந்த மாகாணமுழுமைக்கும் ஏற்கும். இந்த மாகாணத்திற்குமாத்திரமென்ன? எங்கெங்கே புத்திபூர்வகமாய் விவசாயத்தொழில் நடந்துவருகிறதோ அந்தத் நாக்குடிகளுக்கெல்லாம் அடுக்கும். இந்த நவீனமுறை பெரும்பாலும் சிறு மிராசுக்குடித்தனமுள்ள தேசங்களுக்கு அடுக்காதென்று கட்சிசொல்வார்களும் உண்டு; இது பெருந்தவறு. இந்த நவீனமுறைக்குப் பெருமுதலுள்ள மனிதர்கள் நடத்தும் பெரும்பண்ணையே வேண்டுமென்பது அவசியமில்லை. பெரும் பண்ணைச் சந்தேகமில்லாமல் செலவுக்குமிஞ்சிய உணவைத் தருந்தான். மொத்தத்தில் அவர்களுக்கு அதிகம் விளையும். இதுவுமன்றியும் பெரும் பண்ணைகளில் விஸ்தாரம் யந்திரசக்தியே பிரயோகிக்க இடமிருப்பதினுல் அதற்குத்தக்கபடி ஆள்மாகாணச்செலவு குறையும். ஆனுலும் நவீனமுறை சிறுபண்ணைக்கு உதவாதென்பதில்லை. நாட்டுவளப்பமுறையைக் கவனிக்கும் சில சித்தாந்திகள் சிறுபண்ணையே அதிக விளைவுக்கு இடமுள்ளதென்று சொல்லுகிறார்கள். ஆகிலும், பண்ணையின் பரிமாணத்தைக் குறித்து நிபந்தனை ஏற்படுத்துவது பெருந்தப்பு. பெரும்பண்ணையும் வேண்டும் சிறுபண்ணையும் வேண்டுந்தான். சிறுபண்ணை நிலங்கள் கொடுக்கும் பலனுக்குக் கஞ்சம்தேசத்தை திர்ஷ்டாந்தமாக அடிக்கடி காட்டுவதுண்டு. ஆனல் சிலகாலத்துக்குமுன் இந்தத் தேசத்தின் விளைவைப்பற்றி எழுதிய கோஷ்பாரா கணக்குகளுக்கும், சிறுபண்ணையைப்பற்றிப் புகழ்ந்துபேசுபவர்களின் கணக்குக்கும் விசேஷ தாரதம்மியம் உண்டாயிருக்கிறது. ஐக்கியராஜ்யத்தில் சராசரி கோதுமைவிளைவு 28 கலம். இதற்கெதிராய் மேற்படி பெல்ஜியம் ராஜ்யத்தின் சராசரி விளைவு 20 கலம். கொஞ்சநாளைக்குமுன் விவசாயசபையின் ஆலோசனை ரசாயனசாஸ்திரியாகிய டாக்டர் ஓயல்கரும், மேற்படி சபையின் காரியதரிசியும், மற்றும் சிலரும் சேர்ந்த ஒரு கண்காணிச் சபையார் பெல்ஜியம்தேசத்து விவசாயத்தைப்பற்றி அறிக்கை எழுதும்படி அனுப்பப்பட்டார்கள். அவர்கள் சொல்வது: நிலமும் பருவமும் ஒத்திருந்தால் பெல்ஜியம்தேசத்தில் காணும் கண்டுமுதல் ஐக்கியராஜ்யத்தில் விளையும் விளைவுக்கு பேர்பாதிதான் இருக்கு

மென்றும், சிறுபண்ணையில் முதல்தரமான ஈஸ்ட் பிளாண்டர்ஸ் மாகாணத்தில் சேர்ந்த பண்ணைகளுக்காக துரைத்தனத்தார் போனவருஷம் கொடுத்த பகுதிகளில் முதல்வெகுமதி 105 ஏக்ராவுள்ள ஒரு பண்ணைக்கும் இரண்டாவது 62 ஏக்ராவுள்ள மற்றொருபண்ணைக்கும் கொடுக்கப்பட்டன. சிறுபண்ணைகள் நடக்கும் இடங்களிலெல்லாம் வரியதிகம். உழைப்பு சிரமமில்லை; கூலியும் பற்றாது என்று சொல்லுகிறார்கள்.

பண்ணைத்தொழில் ஜனமடர்ந்த தேசத்தில் சிறுபண்ணைக்கு அனுகூலங்கள் அதிகம்தான்; ஆகிலும் உணவுக்கு மிஞ்சின விளைவு சொல்பந்தானிருக்கும். சிறுபண்ணையாகட்டும் பெரும்பண்ணையாகட்டும் விவசாயத்தில் லாபம் அதிகம் வராது. இங்கிலாண்டில் தாங்கள் செலவிடும் முதலின்பேரில் நூற்றுக்கு பத்துவிகிதம் லாபம்பெறும் பயிர்க்குடிகள் இருப்பதருமை. பெரும்பாலும் நூற்றுக்கு ஐந்துவிகித லாபத்துக்குமேல் அவர்கள் பெறமாட்டார்கள். ஆனாலென்ன? குடியானவன் வாழ்வு குளிர்ந்த வாழ்வு. குடித்தனக்காரர்கள் தாங்களுள்ளநாள்வரையில் நிலத்தைப் பண்படுத்தலாம். அவர்கள் மற்றைத் தொழிலாளிகளைப்போலவும் வேலைக்காரர்களைப்போலவும் தள்ளாதபிராயத்தில் தங்களைக் காப்பாற்றவேணுமேயென்று தங்கள் வரும்படியில் வருஷாந்தரம் இவ்வளவென்று மீர்த்துவைக்கவேண்டிய அவசியமில்லை. புதிசும் குடிகள் வேலையைவிட்டு ஒழிந்துபோவதில்லை. ஏனென்று விசாரித்தால் ஒழிந்துபோய் இதைக்காட்டிலும் ரம்மியமான காரியமென்ன செய்யப்போகிறார்கள். நாமெல்லாம் வேலைவிட்டொழிந்து எந்தக்காரியத்தில் பொழுதுபோக்க—அபேக்ஷிக்கிறோமோ அந்த வேலையிலேயே அவர்கள் உள்ளநாள் உள்ளளவும் ஆனந்தத்தோடு பிரவேசித்திருக்கிறார்கள். பண்ணைத்தொழில் செம்மையாய் நடந்துவருமிடங்களிலும் விவசாயவரும்படி எப்போதும் வறக்காழத்தானிருக்குமென்று சொன்னேனே. இது பேர்போன இங்கிலீஷ் குடித்தனக்காரராகிய மிட்சி என்பவர் பண்ணையின் சாகுபடி கோஷ்பாரா கணக்குகளினால் தெளிப்பாய்த் தெரியும். எப்படியென்றால்,

1865	£ 557
1896	573
1867	773
1868	570
1869	427
1870	728
1871	668
1972	369
Total	4665. மொத்தம்.

வருஷாந்தர சராசரி 883 £.

இதுதான் வருஷவாரி வரிக்கும் போட்டமுதலின் வட்டிக்கும் மேலே லாபத்துக்கும் உள்ளதொகை. வடிவும் பெருக்கும் அதிகயிருந்தபோதிலும் சராசரி மொத்தம் திருப்திகரமானதுதான். இவருடைய பண்ணை 170 ஏக்ரா. இதை ஏக்ராவுக்கு 25 பவுன் மேனிக்கு 20 வருஷங்களுக்கு முன் அவர் விலைக்குவாங்கினார். அதாவது, அவ்வளவுக்கும் 4,250 பவுன் கொடுத்தார். இந்தப் பண்ணையில் விவசாயத்தைச் சீர்படுத்தும்பொருட்டு ஒரு 3,000 பவுன்போலே செலவிட்டார். சாலை கட்டிடங்கள் முதலியவற்றிற்காக 3,000 பவுன் போட்டார். இந்தக் கட்டிடங்களில் அவர் குடியிருக்கும் வீட்டிற்கே ஆயிரம் பவுன் பிடித்தது. தாக்குத்தொகையாய் இந்தப் பண்ணையில் அவருக்கு மொத்தத்தில் பிடித்தது 10,000 பவுன். இது விவசாயம் செய்வதற்கு வைத்திருக்கும் முதல் 3,500 பவுன். இந்தப் பண்ணையின் கொள்முதலுக்கும் திருத்துப்பாட்டுக்காகச் செலவழிந்த முதலுக்கும் வழக்கப்படி நூற்றுக்கு மூன்று வட்டிகட்டி விவசாயமுதலின் பேரில் அவருக்கு நூற்றுக்கு எட்டுவிகிதம் லாபம் வருகிறது. 13,500 பவுன் போட்ட இடத்தில் இந்த லாபம் சொல்பமாய்த்தான் தோன்றும். ஆனால் வருஷவாரி அவனுக்கு வரும் 580 பவுன் லாபத்துடன்கூட நல்ல சுகமான வீடு, விஹாரபூமி, தோட்டம் துரவு இதெல்லாம் இலவசமாய் அனுபவிக்கிறான். இதுமாத்திரமா! சுககரமான தொழில் அவன் தொழில்.

ருஷியதேசத்தில் புகைவண்டி உண்டாக்கவும், (Peru) பெரு தேசத்தில் வெள்ளிசுரங்கம் தூரண்டவும், ஸ்பேன் தேசத்தில் லோகத்தாருக்கு உதவிசெய்யவும் தன்பணம் போகாமல் தன் தேசத்திலே நன்மைசெய்து உழைப்பாளிக்கு அதிக வேலைகொடுத்து மலிவான உணவுக்கு இடமுண்டாக்கி தானிருக்கும் மாகாணத்தின் சுகாதார நிலையை விர்த்திசெய்து இப்படியெல்லாம் தம்பணம் உதவுகிறதேயென்கிற சந்தோஷம் உழவர்க்குண்டு. ஆனால் இந்த மிட்சிதுரையைப்போல் அவ்வளவு பெரியமுதல் வைத்துத்தான் இந்த நவீனமுறைப்படி பயிர்த்தொழில் செய்யலாகுமென்று நினைப்பது மிகவும் துக்ககரமாயிருக்கும். சாதாரணமாய் இந்தத் தேசத்தில் அப்படி முதல்வைத்து பலன்காண்பது கஷ்டம். இங்கு விளையும் பொருள்கள் அத்தனையாய் விலைபெற்றனவல்ல. பெருங்கூலிவாங்கி கைத்தொழில் காருகத்தொழில்செய்யும் வகுப்பாருக்கு அன்னமளிக்கும் அவசரமில்லை. இங்கு விளையும் பொருள் பெரும்பாலும் ஆயிரம் ஆயிரம் மைல் தேடிப்போய் விலைப்படவேண்டியிருக்கிறது. எத்தனையோ கை மாறவேண்டியிருக்கிறது. ஒவ்வொருத்தனும் தன்தன் லாபத்தை அதன் தலைமேல்தான் வைக்கிறான். ஆதலால் இதில் அதிக லாபம்பெற ஆசையில்லை. ஒவ்வொரு ஏக்ராவிலும் கண்டுமுதலை விர்த்திசெய்தால்தான் பலனுண்டு. வருஷவாரி ஏக்ராவுக்கு பதினைந்து ரூபாய்க்குக்கூட ஈடுகெட்டாத சாகுபடியைக் கண்டு போதுமென்றிராமல் புத்திபூர்வகமாய் வேலைசெய்து ஏக்ராவுக்கு 30 ரூபா

யக்குமேல் சாகுபடியேறும்படி முயற்சிசெய்யவேண்டும். இப்படிச் செய்தால் வரியினால் அத்தனை கக்கசமுண்டாகாது. ஆள் மாகாணத்துக்கதிகம் கொடுக்கவேண்டியதுதான். ஆனால் அப்போது பண்ணையாட்கள் செம்மையாய் உண்ண இடமுண்டு.

ஆதலால் விளைவுப்பொருள் விளைந்த இடத்திலேயே அதிகம் செலவாகும். இந்தத் தேசத்து கலாசாலைகளும் பாடசாலைகளும் விவசாயத்தொழில் செய்யத்தகுந்த திறமுள்ளபேர்களையெல்லாம் இழுத்துக்கொள்ளுகின்றன. இவர்கள் மனக்கண் திறந்து தெளிந்த அபிப்பிராயங்கள்கொண்டு நாட்டுப்புறத்தில் பயிர்த்தொழில் செய்யும் தங்கள் நட்டாமுட்டியினத்தாரைப் பார்த்து எவ்வளவும் மதிக்காமல் அவர்கள் தொழிலை[illegible] அருமை கொண்டு இருக்கிறார்கள்; இது இயல்பேயொழிய ஆச்சரியமன்று. நாம் இப்படிப் படித்தவர்களை விவசாயத்தொழிலில் கருத்துவைக்கும்படி வசப்படுத்தவேண்டும். நாகரீகமுதிர்ந்த தேசங்களில் நவீனமுறைப்படி விவசாயம் செய்பவர்களுக்கு அது சித்திபெற முதல்தரமான கல்வியும் விவேகாதிக்கமும் வேண்டுமென்று அவர்களுக்குப் போதிக்கவேண்டும். ஒவ்வொரு தக்குடியிலும் நன்றாய்ப் படித்துத்தேர்ந்த சிலர் பயிரிடுங்குடிகளாயிருந்தால் அவர்களுடைய விவேகமூலமாயுண்டாகும் லாபம் இத்தனையத்தனையா? விவசாயத்துக்கடுத்த இந்தத் தேசத்திலுள்ள விவசாய வருவாய்களனைத்தையும் பயன்படச்செய்து தாங்களும் விரும்பத்தக்க வாழ்க்கைச் சுகங்களில் ஒன்றும் குறைவின்றி அனுபவித்துத் தங்கள் தேசத்தாருடைய நிலைமையையும் விர்த்திசெய்வதற்கு இவர்களுக்கு இடமுண்டு. இக்காலத்தில் ராப்பட்டினி பகல்கஞ்சியென்கிற விவசாயமுறை எத்தனைநாளைக்கு நிற்கப்போகிறது. இந்துதேசத்திலிருந்து உண்டுமிகுந்த தானியமல்ல பிறதேசத்திற்கு ஏற்றுமதியாய்ப்போகிறது. ஜனங்களுடைய ஏழ்மைத்தனத்தினால் வைத்துத்தின்ன மனமில்லாமல் வயிற்றைவாயை ஒடுக்கியல்லவோ தானியத்தை விற்கிறார்கள். நமது பூமியின் சத்து இப்படிக் குறைந்துவர எத்தனைநாளைக்குத் தள்ளலாம்.

இப்படி இருக்கயிருக்க நாடெங்கும் பாழ்படும் காலம் கிட்டுமே. இத்தேசத்துப் பண்ணையாளுக்கும் நாம் ஏதாவது சகாயம் செய்யவேண்டும். நாகரீகமுள்ள தேசமென்று பேர்கொண்ட எந்தநாட்டிலும் பண்ணையாளின் நிலைமை இப்படியிருந்தால் மெத்த ஈனயமே. பருவம் மழை நன்றாயிருக்கும் காலத்திலும் வருஷமுழுக்க அவனுக்கும் அவன் குடும்பத்துக்கும் ஆண்பாடு பெண்பாடுபட்டும் நித்தியம் 2 அணா வருவது கஷ்டம். காலம் பிரதிகூலப்பட்டாலோ அவன்கதி மிகவும் பரிதவிக்கத்தக்கதாகும். அடிமைத்தனத்தைப்பற்றி நாலுபக்கத்திலும் முறைப்பாடு இக்காலத்தில் பிறந்திருக்கிறதைக் கேட்கிறோமே. இந்த ஏழை ஜனங்களினுடைய நிலைமை பலவிடங்களில் அந்த முறிகளுடைய நிலைமையைக்காட்டிலும் கேடுள்

ளது. ஐர்லாண்டு தேசத்தையும் நான் பார்த்திருக்கிறேன். அங்கு காரியமிருக்குமிருப்பு ஒருவாறு இந்தத் தேசத்தையொத்திருக்கிறது. ஆனால் இந்த இரண்டு தேசங்களின் தாரதம்மியத்துக்காக எவ்வளவு கழித்துப் பார்த்தபோதிலும் பயிரிடும் குடிகளின் நிலைமை இத்தேசத்தைக்காட்டிலும், ஐர்லாண்டுதேசத்தில் மிகவும் மேன்பாடுள்ளதுதான். சீமையிலே நம்முடைய துரைத்தனத்தார் ஐர்லாண்டுதேசத்து பயிர்க்குடிகளின் இருப்பையும் வளப்பத்தையும் விர்த்திசெய்யும்பொருட்டு முந்தி முயற்சிசெய்வது உங்களுக்கு எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். அந்தத் தேசம் சீர்கெட்டிருப்பதுக்குக் காரணம் பண்ணைக்காரர்களின் அவிவேகமும் வறுமையும் தான். நிலத்தை அனுபோகத்துக்கு ஒப்புக்கொண்டால் குறைவுவருமென்பதில்லை. நிலமிராசுதாரர்களுக்குப் பேராசை உண்டென்பதுமில்லை. துரைத்தனத்தார் இக்குறைவை ஒருவாறு உணர்ந்து குடித்தனக்காரர்களுக்கு வித்தைகற்பிக்க வருஷம்தோறும் ஆயிரக்கணக்காய்ப் பணம் செலவிடுகிறார்கள். அத்தேசத்திலுள்ள பாரிமிராசுதாரர்களெல்லாரும் சற்றேறக்குறைய இந்த மாதிரி நன்மையே ஆடம்பரமில்லாமற் செய்துவருகிறார்கள். அவர்கள் வாரக்குடிகள் வேண்டும்போது எப்போதும் உதவத்தக்க ஆலோசனையும் உபகாரமும் பெறவல்ல விவசாயத்தொழிலில் முறைப்படி பயின்று தங்கள் சுவாஸ்தியத்தில் வைத்திருக்கும் குமாஸ்தாக்களின்மூலமாய் இதை நிறைவேற்றுகிறார்கள். ஐர்லாண்டுதேசத்து சிறுகுடித்தனக்காரனுக்கு அவனுடைய தொழிலை அறியவேண்டிய கல்விதப்ப வேறே சிறந்த மூலதனமில்லையென்று துரைத்தனத்தார் கண்டறிந்தார்கள். இப்படிக் குறைவு கண்டது ஐர்லாண்டுதேசத்தில் மாத்திரமல்ல, யூரோப்கண்டத்திலுள்ள ஒவ்வொரு நாட்டிலும், அமெரிக்காகண்டத்திலுள்ள நாகரீகத்தில் முதிர்ந்த சகலமான துரைத்தனங்களிலும் நாடுகளிலும் இம்மாதிரி குறைவு கண்டுபிடித்து, குடித்தனக்காரன் தன் தொழிலுக்கு வேண்டிய மூலாதாரகொள்கைகளை தேரும்படியான சாதனங்களைச் செய்துவருகிறார்கள். இங்கிலாண்டிலும் ஸ்காட்லாண்டிலும் துரைத்தனத்தார் இவ்விஷயத்தில் அதிகமாய் ஒன்றும் செய்வதில்லை. இதற்கு ஓர் எளிதான ஏது உண்டு. அங்கு ஒவ்வொரு மிராசுதாரனும் வாரக்குடியும் உள்ளூர் விவசாயச்சபைக்கும் நாட்டுக்கெல்லாம் பொதுவிவசாயக்கூட்டத்தாருக்கும் கையொப்பவகையாக உதவிசெய்ய அக்கூட்டத்தார் விவசாயவிர்த்திக்காகவேண்டிய காரியங்களைச் செய்வார்கள். இங்கிலாண்டுதேசத்திலுள்ள விவசாயச்சபையார் வருஷாந்தரம் 25,000 பவுன்முதல் 30,000 பவுன் வரைக்கும் செலவிடுகிறார்கள். தாங்கள் வைத்திருக்கும் பத்திரிகையை நடத்தும் அதிபர் ஒருவரையும், ஆலோசனைக்காக ரசாயனசாஸ்திரி ஒருவரையும், ஓர் விருக்ஷமூலவித்தியாதுரந்தரரையும், ஒரு அசுவவைத்தியரையும், ஓர் யந்திர கலாசாஸ்திரக்கியரையும், மற்றும் வேறு தொழிலாளிகளையும் தங்கள்வேலையில்

அமர்த்திக்கொண்டிருக்கிறார்கள். ஸ்காட்லாண்டு தேசத்தினுடைய மேல்நாட்டு சபையாரும் தங்கள் வருவாய்கள் கொஞ்சமாயிருக்கினும் ஏறக்குறைய இம்மாதிரிகாரியங்களையே செய்துவருகிறார்கள். இந்த மேல்நாட்டுச்சபையாரைப்போல விவசாயவிர்த்திக்காக இவ்வளவு செலவிட்டுவருகிற இதர விவசாயசபைகளுமுண்டு. அவர்களில் பெரும்பாலார்களுக்கு அவ்வளவாகச் செலவுசெய்ய வாய்க்காது. இங்கிலாண்டிலும் ஸ்காட்லாண்டிலும் இருநூற்றைம்பதுக்கு மேற்பட்ட விவசாயச்சபையாரும் ஏறக்குறைய 70 குடித்தனக்காரக்கூட்டமும், 50 மாகாண விவசாயசங்கமும் இன்னம் பலக் கிளைக்கூட்டங்களுமுண்டு. இந்தக் கூட்டங்களின் வருஷாந்தர மொத்தச்செலவு 300,000 பவுனுக்கு எவ்வளவும் குறைந்ததல்ல. இதுதவிர மஹா பிரிட்டானியாவிலுள்ள சொந்த நிலக்காரர்களும் நாட்டுப்பெரிய மனிதர்களும் பரிக்ஷார்த்தமாக வைத்திருக்கும் தங்கள் தங்கள் சொந்த விவசாயநிலங்களில் மேல்கண்ட மொத்தத்திற்குக் குறைவின்றி செலவிடுகிறார்கள். ஆதலால் அத்தேசத்தில் விவசாய அபிவிர்த்திக்காக வருஷவாரி செலவாகும் மொத்தம் 600,000 பவுன்போலாகும். இப்படியிருந்தும் இங்கிலாண்டுதேசத்தார் இவ்விஷயத்தில் ஒன்றும் செலவிடுகிறதில்லையென்று சொல்வாருமுண்டு. ஒன்று நிஜம், அங்குள்ள வித்தியாசாலைக்கு வருஷவாரி 15,000 பவுன்முதல், 20,000 பவுனுக்குமேல் பிடிக்கிறதில்லை. விவசாயத்தொழில் கற்போருக்கென்று சாஸ்திரவிதமாய்ப் போதிக்க வேறொரு வித்தியாநிலையுமில்லை; ஆனால் இது இப்படியே இராது. குடித்தனக்காரர்கள் இந்த விஷயத்தில் கிண்ட ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் ஐர்லாண்டுதேசத்திலுள்ள கலாசாலைகளிலே துரைத்தனத்தார் செலவில் விவசாயசாஸ்திரமுறை கற்பிக்கும் பண்டிதர்கள் வைத்திருப்பானேன்? ஐர்லாண்டுதேசத்தில் எங்கேபார்த்தாலும் விவசாயமுறை கற்பிக்கும் பாடசாலைகளும் பரிக்ஷைக்காக பண்ணைகளும் டப்ளின் நகரத்தில் ஓர் பெரிய மத்திய விவசாய வித்தியாநிலையமும் துரைத்தனத்தார் வைத்து ஆதரிப்பானேன்? இப்படியெல்லாம் அத்தேசத்துக்குச்செய்ய இங்கிலாண்டு ஸ்காட்லாண்டுதேசத்து குடித்தனக்காரர்களுக்கு மாத்திரம் இந்த விவசாய வித்தையைப்பற்றி துரைத்தனத்தார் ஏன் உபேக்ஷிக்கவேண்டும். எடின்பரோ கலாசாலையில் வைத்திருக்கும் விவசாய வித்தியாபண்டிதர்களுக்கும், பர்மிங்காம் நகரத்திலுள்ள கலாசாலையில் விவசாயத்தொழில் கற்பிக்கும் நிபுணர்களுக்கும் ஏதோ சுவல்ப உபகாரம் செய்துவருகிறார்களேயொழிய வேறு என்னசெய்கிறார்களென்று வாதாடுகிறார்கள். ஜர்மானியிலும், பிரான்சிலும், ருஷியாவிலும், பெல்ஜியத்திலும், உலாந்தாவிலும், டென்மார்க்கிலும், ஆஸ்திரியாவிலும் இந்த விவசாய வித்தையைப்பற்றி பெருமுயற்சி செய்துவருகிறார்கள். விவசாய அத்தியக்ஷர்களையும், விவசாய வித்தியாநிலையங்களையும், பசு அசுவவைத்தியசாலைகளையும், விவசாய

பசுவைத்தியபாடசாலைகளையும், விவசாயவஸ்து காட்சிநிலையங்களையும் பரிக்ஷார்த்தமாகவும் பார்த்துக் கற்கும்படிக்கும் ஆனபண்ணைகளையும், விருக்ஷமூலத்தோட்டங்களையும், இன்னும் பலவிதமான ஸ்தாபனங்களையும் பெரும்பாலும் முற்றும் துரைத்தனத்தார் உதவிகொண்டே வைத்து நடத்திவருகிறார்கள். இங்கு இப்படியிருக்க, அனுபவத்தில் தாம்தானென்று சகல தேசத்தாரையும் மிஞ்சிநிற்கும் அமெரிக்கர்கள் இந்த விவசாய வித்தியாபிவிர்த்தி செய்யும் முயற்சியில் யூரோப்கண்டநாட்டார் தலையை மிதிக்கிறார்கள். அங்குள்ள ஐக்கியநாட்டுத் துரைத்தனத்தார் ஒவ்வொரு உள்நாட்டிலும் பரிக்ஷைப்பண்ணைகள், விருக்ஷமூலதோட்டங்கள், கண்காட்சிசாலைகள் முதலிய உபகரணங்களோடு ஒரு விவசாய வித்தியாநிலையத்தை வைத்து ஆதரிப்பதற்கென்று ஏறக்குறைய 15,000 முதல், 20,000 டாலர்* மதிப்புள்ள 10,000,000 ஏக்ராநிலத்தை சர்வமானியம் விட்டிருக்கிறார்கள். தென் அமெரிக்காவிலும் பிரெஸீல் பெருந்துரைத்தனத்தார்கள் இந்தவழியில் வெகு முயற்சிசெய்கிறார்கள். நவீனவிவசாயமுறையால் பலித்து நிறைவேறிவரும் சாதனங்கள் இவைமாத்திரமல்ல. அது புதிதுபுதிதாய் விஸ்தாரமான கைத்தொழில் முயற்சிக்கு இடமுண்டாக்கிறது. இப்போது பாருங்கள், மகா பிரிட்டானியாவிலும், யூரோப்கண்டத்திலும் அமெரிக்காவிலும் பார்க்குமிடம்தோறும் பிர்மாண்டமான கருவிகள் இயற்றும் காருகசாலைகளும், அவற்றுள் ஆயிரக்கணக்காய்த் தொழிலாளிகளும், அவர்களுக்குக் கோடிக்கணக்காய்க் கூலிகளும் ஏற்பட்டிருக்கின்றன. இன்னம் பாருங்கள், சென்ற 20 வருஷகாலமாய் ஒரு வர்த்தகம் பிர்மாண்டமாய் நடந்துவருகிறது. கப்பல்[illegible]ங்கள் இங்கிலாண்டுதேசத்துக்கு அதிலுள்ள விளைவு குன்றுமலிருக்க நிலக்கொழுமைக்குரிய எருப்பதார்த்தங்களைக் கொணர்ந்து கொட்டினவண்ணமாயிருக்கின்றன. இங்கிலாண்டுதேசத்து நிலத்தில் ஏற்பட்டுப்போகிற கொழுமைக்கு ஈடுசெய்ய யூரோப்கண்டத்திலுள்ள மலைத்தொடர்களும், அமெரிக்காகண்டத்திலுள்ள மைதானங்களும் அயனரேகைக்கிடையிலுள்ள சமுத்திரதீபங்களும் எருப்பதார்த்தங்களுக்காக வெட்டி வறட்டப்படுகின்றன. இப்படி நவீனவிவசாயமுறை பலவிதத் தொழிலுக்கும் உயிர்கொடுக்கின்றது. தொழிலாளிக்கு அதிகவேலையும் நல்ல கூலியும் அகப்படுகின்றது. எல்லோருக்கும் பயனையளிக்கின்றது. ஒரு தேசத்தினுடைய நாகரீகத்துக்குக் குறி அதிலுள்ள விவசாய நிலைமையைக்காட்டிலும் சரியானது மற்றொன்றில்லையென்று சொல்வது தப்பென்று விவசாயாபிவிர்த்திவிஷயத்தில் நாம் இப்போதான் அடிவைக்கிறோம். நவீனவிவசாயமுறை பலப்பதற்குமுன் எத்தனையோ பெரிய பலமான விகல்பங்கள் உண்டாகவேண்டும். இந்த விகற்பம் தப்பாமல் நாளடைவில் முடியும், எந்தக்

* டாலர் என்றால் இரண்டரை ரூபாய்.

காரியத்திலும் அபிவிர்த்தி வந்தவழியைப்பார்த்தால் அதற்கு அடிக்கொரு தரம் ஜனங்களின் மௌட்டியத்தினாலும் அபிப்பிராயத்தினாலும் விகாதம் உண்டாகாமல் இருந்ததில்லை. மேலும் மேலும் முயற்சிசெய்து போராடி, காரியம் நடத்த சகலவிதத்திலும் ஏதுவிருக்கிறது. சென்ற 50 வருஷத்தின் வரலாறுகளைப்பார்த்தால் அறியாமையால் வரும் விரோதத்தைப் படிப்படியாய் மேற்கொண்டு காரியசித்திபெற்றதற்குத் திர்ஷ்டாந்தமல்லவா?



இந்துதேசத்து

நூதன விவசாயம்.

II.

நான் புதிய பயிர்த்தொழின் முறையைக்குறித்தும், சாஸ்திரங்கள் அத்தொழில்செய்வதற்கு என்ன உபகாரஞ்செய்கிறதோ அதைக்குறித்தும் பிரசங்கிக்கவேண்டுமென்று நினைத்து, முதலாவதுவிஷயத்தைப் பிரசங்கித்தேன். அதைக் கேட்ட இத்தேசத்தாரான என் சிநேகிதர்கள், இந்து தேச விவசாயத்தைக்குறித்து ஒன்றுஞ்சொல்லவில்லையேயென்று குறை கூறினார்களாம். சரிதான், அதைப்பற்றிச் சொல்லவில்லையென்று நான் பூரணமாய் ஒத்துக்கொள்ளுகிறேன்; ஏனெனில், இத்தேசத்தில் நடந்து வருகிறது பழைய பயிர்த்தொழின் முறையாகையால், என் பிரசங்கம் இதை எப்படி எட்டும்? ஆகிலும், இந்தவிஷயத்தில் அவர்கள் குறை கூறினது நமக்கு உச்சாகத்தைத் தருகின்றது. அவர்களுக்கு ஒரு விசாரம் பிறந்ததே நமக்குச் சந்தோஷந்தான். என்னுடைய மனப்போக்கும் அவர்கள் மனப்போக்குப்போலவே இருக்கின்றது. ஆகையால் நான் இப்போது உபநியசிக்க உத்தேசித்திருந்த மற்றொருவிஷயத்தை நிறுத்தி, அவர்கள் கோரிக்கையின்படி இத்தேசத்து விவசாயவிஷயத்தையே உபநியசிக்க ஆரம்பிக்கிறேன். அதாவது, ஒரு இந்துக் குடித்தனக்காரன் புதிய பயிர்த்தொழின் முறையால் என்னசகாயம் பெறக்கூடுமென்பதே.

சீருற்ற பயிர்த்தொழிலால் இந்துக் குடியானவன் அடையத்தக்க பலன்களில் சிலவற்றைமாத்திரம்தான் இந்த ஒரு உபநியாசத்தில் சொல்லக்கூடும். இப்படிப் பன்னிரண்டு உபநியாசங்கள் செய்தபோதிலும் இவ்விஷயம் முழுதும் சொல்லிமாளாது. அதுவுமல்லாமல் சாஸ்திரபரிசயமில்லாத சாதாரண ஜனங்களுக்கு உணர்த்தக்கூடாத சில பாகங்களுமுண்டு. போன உபநியாசத்தில் புதிய பயிர்முறையே புத்திக்கடுத்ததென்றும், சாஸ்திரஉண்மையை அநுசரித்த கொள்கைகளைத்தழுவி நடந்தேறிவருகிறதென்றும், எல்லாத் தேசஸ்தர்களும் அநுபவத்தில் பார்த்த பரீக்ஷைக்கு இளையாததென்றும், எல்லா நிலைமைக்கும் ஒத்ததென்றும் சொன்னேன். இந்த அபிப்பிராயத்தையே நீங்களும் அறிந்துகொள்வது எனக்கு இஷ்டம். போன உபநியாசத்தில் சொன்னபடி புதிய பயிரிடுமுறைக்கு ஒரு தேசமும் உரிமைப்பட்டதல்ல. இங்கிலாண்ட் ஸ்காட்லண்ட் ஜர்மனி அமெரிக்கா என்னும் தேசங்களில் அது வெகுவாய் வழங்கிவந்தபோதி

றாம், அது இங்கிலீஷ் ஸ்காட்சு ஜர்மானியர் அமெரிக்கர் இவர்கள் யாருக்கேனும் உரியதல்ல. இது எத்தேசத்துக்கும் அன்னியமல்ல; எல்லாத் தேசத்துக்கும் பொது. இதன் கொள்கைகளும் கற்பனைகளும் யூரோப் அமெரிக்கா கண்டங்களுக்கு அடுத்திருப்பதுபோல இந்தியாவுக்கும் அடுத்திருக்கும்; ஆனால் இதை விளக்கத்தக்க விவசாய ஆதாரங்கள் இத்தேசத்தில் இல்லாமற்போயின. இதொரு தாழ்வுதான். ஆகிலும், இந்த உபநியாசத்துக்கு அடுத்த சில பிரமாணங்கள் அங்கங்கு சர்க்கார் தஸ்தவேஜுகளிலே பொறுக்கியெடுத்தவை விசேஷமாயுண்டு. நான் நிரூபணம் செய்வதற்கு என் கண்முன்னும் அநுபவத்திலும் வந்த காரியங்களையே முக்கியமாய்க் கையாடுவேன்.

நான் சொல்லப்புகும் விஷயத்தைப் பல பிரிவாக வகுத்து, ஒவ்வொரு பிரிவாக விளக்கிக்கொண்டுபோவது மிகவும் அநுகூலமான மார்க்கமாயிருக்குமென்று தோன்றுகிறது.

அப்பிரிவுகளாவன: பண்படுத்தல், எரு, பயிர், பண்ணைக்காலி; அல்லது ஆடுமாடுகள், ஏர்முதலியவைகள், கட்டிடம், மரம், மட்டை, வேலி, பண்ணையாள், பயிரிடுங்குடி.

1. உழவு, கொத்து, வெட்டு முதலியவைகளால் நிலத்தை வேளாண்மைக்கேற்கும்படி செய்தல்தான் பண்படுத்தலென்பது.

நிலம்.

இத்தேசத்தில் பூமியைப் பண்படுத்துவதற்குக் கலப்பை என்கிற ஒரே கருவிதான் வைத்திருக்கிறார்கள். இதனால் செய்யும் உழவு ஆழமற்றதாயும் குறைவுள்ளதாயுமிருக்கிறது. வெகுவாக உஷ்ணத்தால் காம்பு பற்றிய இத்தேச நிலத்துக்கு இந்த உழவு எவ்வளவும் போதாது. இந்துதேசத்து உழவையுழவென்று சொல்லக்கூடாது. மேலேமேலே கிளறுதலென்றுதான் சொல்லலாம். இதில் கீழ்மண் மேல்மண்ணாகும்படி உழுகிறதில்லை. கலப்பைக்காறு நான்கு அங்குலத்துக் கீழ்த்தரையில் இறங்குகிறது அருமை. சாதாரணமாய்க் குடியானவன் இந்தக் கேடுகெட்ட கலப்பையால் பலசாலுழுது கிரமமாய்ப் புழுதியாக்கி ஒருவாறாய் விதைவிதைக்க அடித்தளம் ஏற்படுத்திக்கொள்ளுகிறார்கள். இந்த அடிப்பரப்பு ஆழ்ந்து ஒரு மட்டமாகவிருக்கும்படி செய்துகொள்ள அவனால் முடிகிறதில்லை. ஆழ்ந்த அடித்தளமிருக்கவேண்டுமென்றால் எல்லா விதையும் அதிக ஆழத்தில் புதைக்கவேண்டுமென்பது கருத்தல்ல. பலவகை வித்துக்குப் பல வகை ஆழம் வேண்டும். ஆனால் எவ்வகை விதைக்கும் அதற்கு அடித்தரை நன்றாகவுழுது பதமாயிருக்கவேண்டும். ஆழமாய் உழாமல் இடப்பட்ட பயிரெல்லாம் காலமழையால் கைகூடுந்தான். தண்ணீர் தேக்கங்கொண்டால் சொற்பகாலங்கூடத் தாளாது. பெருங்காற்றும் அடைமழையும் கூடினால் அழிந்தே போய்விடும். இத்துடன் அதற்கு வியாதியும் வெட்டுப்

பூச்சியும் எங்கேயெங்கேயென்று காத்திருக்கும். புதிய பயிர்த்தொழிலின் முறைப்படி பண்ணைக்காகும் நிலங்களில் உழவு நன்றாய் ஆழ்ந்தேயிருக்கவேண்டும். ஆழ உழுவதால் உடனே பண்ணைக்காகாத நிலங்களுமுண்டு. கீழ்த்தரை பிசுக்கென்று வழவழுத்த மண்ணாயிருந்தால் அது உழவினால் மேலே கிளம்ப புதிய விவசாயமுறைக்குத் தடையாகும். இப்படி மேல்பட்ட மண் பௌதிகவியக்கத்தால் அதாவது வெயில் காற்று முதலானவைகளின் செய்கையால் தன்னியல்புமாறி, நாளடைவில் சாகுபடிபண்ணவும் பதம்பெறும். அடித்தரை சத்தில்லாமல் மேல்மண்ணைவிட சாரங்குறைந்திருந்தால் அந்த நிலமும் வேளாண்மைக்குதவாது.

துரைத்தனத்தார் பரீட்சைக்காக ஏற்படுத்திய சைதாப்பேட்டை தோட்ட நிலத்தில் மேல்மண் அடிமண் இவற்றின் ஒருத்தேசமான மாதிரிகளைப் பிரித்துக்காட்டவேனால் என் அபிப்பிராயம் விளங்கும்.

	மேல்மண். நூற்றுக்கு.	அடிமண். நூற்றுக்கு.
களிப்புலோகம்	4. 42	2. 06
இரும்புச்சிட்டம்	1. 80	2. 90
எரிகந்தகச்சுக்கான்	94	......
சுக்கான்	70	56
சூறைமண்	ஒருதாரை.	......
கந்தகச்சுக்கான்	ஒருதாரை.	......
எரிகாரம்	1. 08	72
ஜீவசத்து	2. 50	1. 74
சதும்பு	2. 76	1. 42
மணல்	85. 90	90. 40
	99. 40	99. 80

இந்த விவரங்களைப் பார்க்குமிடத்து இந்தப் பரீக்ஷைத் தோட்ட நிலத்தில் மேல்மண்ணைக்காட்டிலும் அடிமண் பயிர்க்குரிய உணவுப்பொருளில் மாற்றுக்குறைந்ததென்பது சித்தம். ஆழமாய்த் தோண்டி அடிமண்ணைக் கிளப்பினால் இப்போது விளைகிற சக்தி கெடும்; உதாரணத்தைக்கொண்டு காட்டினால் உங்களுக்கு நன்றாய்த் தெரியும். இப்போது பிரித்துக்காட்டிய நிலையில் இந்த நிலத்தில் ஒரு எக்ரா 8 அங்குல ஆழத்திற்குள்ள மண் 1200 டன் தூக்கும். இதில் சுத்தமணல் 1030 டன்னுக்குக் குறைவில்லை. அடிமண்ணில் இந்தப் பிரமாணங்கொண்டதை நிறுத்தால் 1085 டன் மணலிருக்கும். ஆதலால் இரண்டையும் சேர்க்கும்போது நிலத்தின் சீர் முன்னையதைவிடக் கெடும். மேல்மண்ணில் ஒரு எக்ராவிலிருக்கும் மணலுடன் 54 டன் களிப்புலோகம் சேர்ந்திருக்கின்றது. இதுதான் களிமண்ணில் சேரும் பிரதான திரவியம். இது அத்தனையாகப் பயிருணவுக்கு ஏலாவிட்டாலும், உஷ்ணதேசநிலங்களில் இது சேர்ந்திருந்தால் மெத்த குணமுண்டு. இதின் பௌதிககுணங்கள் அதிகம். இது உள்ள நிலம் மழையில்லாமையால் வரும் தீங்குகளைப் பொறுக்கும். இந்தப் பரீக்ஷைத்

தோட்டநிலத்தில் அடிமண்ணில் இந்த லோகங்குறைவென்று கண்டோம். இதை மேல்மண்ணுடன் கலந்தால் அநாவிருஷ்டி அல்லது மழையில்லாமையைப் பொறுக்கும் திறம் இந்நிலத்திற்குக் குறைவாயிருக்கும். இதுவுமல்லாமல், ஜீவசத்துக்கு நயிர்ப்பை இழுக்கும் சக்தியிருக்கிறபடியால், இது எங்கெங்கே அளவுக்கு மிஞ்சாமலிருக்கிறதோ அங்கெல்லாம் குணமுண்டு. உழவுநிலங்களில் இருக்கத்தக்கது இந்த சத்தும் மேல்மண்ணைவிட கீழ்மண்ணில் குறைவென்று அநுபவத்தில் பார்த்தோம். ஆனால் ஒன்று, மேல்மண்ணைவிட கீழ்மண்ணில் இரும்பு அதிகமிருக்கிறது. மற்ற மூலபதார்த்தங்கள் மட்டுமிஞ்சியிருப்பதால் இது இருந்தும் பயனில்லை. அங்குள்ள உப்புமண்ணும் உடனே பயிருக்குணவாகும்படியான ஸ்திதியிலில்லை. உஷ்ணதேசத்து உழவுநிலங்களிலெல்லாம் இரும்பு நூற்றுக்கு இடை ஒன்று வீதம் சற்று வீச்சாயிருப்பதே நல்லது. இது பயிருணவில் சேர்வதுமன்றி, பூமிக்கே நமிர்ப்பை இழுத்து அது போகாமல் நிறுத்திக்கொள்ளும் சக்தியை உண்டாக்கின்றது. மேல் உதகரித்துக்காட்டினதில் ஆழ்ந்து உழுதால் அதிக எருப்போடவேண்டிவரும். ஆழ்ந்த உழவினால் பயிர்நிலத்தில் ஆழ்ந்து வேர்பற்றும். இந்த வேர் உழுதபாகங்களில் தக்கஉணவில்லாவிட்டால் மேலே மிதப்பாய் நின்று பிரதிகூலம்பண்ணும். சாதாரணமாய் பயிர்உணவுக்கேற்ற பதார்த்தங்கள் மேல்தரையில்காட்டிலும் அடித்தரையில் அதிகம் உண்டு. அடித்தரை இளைத்திருப்பது அபூர்வம். அடித்தரையில் பயிர்விளைவுக்குரிய பதார்த்தங்கள் விஸ்தாரம் உண்டு. அவை உடனே உபயோகப்படாவிடினும் நன்றாய்ப் பண்படுத்தி ஏற்றமாதிரி எருக்கூட்டினால் அநேக போகங்கள் அடுத்து விளையும். இப்படித் திரப் பண்படுத்துவதினால் உண்டாகும் இலாபம் அதிகம். சீமையில் விவசாய அநுபவமுள்ள சிலர் இதைக் கண்டு கொஞ்சங் கண்மூடித்தனமாய் நிலத்தை உழுது பண்படுத்துவதே போதும்; நன்றாய்ப் பண்படுத்தும் பக்ஷத்தில் ஜீவசத்து எரு எவ்வளவும் வேண்டாம். விசேஷமாய் நீராவியந்திரபலத்தால் பண்படுத்து நிலத்திற்கு இது பொருந்துமென்கிறார்கள். இந்த விஷயத்தில் விசேஷமாகச் செய்த பரீக்ஷைகளில், ஹார்ட்போர்ட் மாகாணத்தில் ப்ரௌட் துரை என்பவர் செய்தது பிரசித்தம்.

அவர் நிலமுழுதும் நீராவியந்திர உழவே. சென்ற பத்துவருஷகாலமாய் வண்டியிழுக்கும் குதிரைகள் ஆறுதவிர, வேறு உழவுக்கால்நடைகளை அவர் வைத்துக்கொண்டதேயில்லை. அவர் நிலம் 450 எக்ரா; அது 12 செய்களாகப் பிரிந்திருக்கிறது. செய்கால் வர்த்தமானபத்திரிகையாருக்காக சுமார் ஐந்து வருஷத்துக்குமுன் நான் போய்ப்பார்த்தேன். அங்கு நிலத்தின் சீர்மை கணக்குவழக்கு முதலியவற்றை நான் செம்மையாய் அறிந்து கொள்ளவேண்டிய உதவிசெய்தார்கள். அக்காலத்தில் இந்த நிலம் ஐந்து வருஷ பரீக்ஷாநுபவத்தில்தான் இருந்தது. அப்போதே கைகூடின பலன்

நிலமிராசுதாரருக்குத் திருப்திகரந்தான். இன்னமும் தாம் கொண்ட பரீக்ஷையை நடத்திவருகிறார். அந்த ஆறு குதிரைகளின் உணவுக்கு வேண்டியது போக, மற்றதெல்லாம் விளைந்தவுடனே விற்றுப்போகிறது. போனவருஷ விளைவின் விவரம்.

சராசரி விலை.

	ஒரு எக்ராவுக்கு. £	s.	மொத்தம். £
150 எக்ரா கோதுமை	13 பவுன்.	10 ஷில்லிங்.	2025 பவுன்.
98 ,, பார்லி	9 ,,	1 ,,	887 ,,
90 ,, சீமைக் கொள்ளும் அவரையும்.	8 ,,	16 ,,	792 ,,
80 ,, புல்	14 ,,	16 ,,	1184 ,,
418 எக்ரா சராசரி,	11	10-9	மொத்தம் 4888.

குதிரைகளுக்காக 50 பவுன் விலையுள்ள புல் கையிருப்பாயிருந்தது. இந்த நிலவிளைவில்தான் ஆறு குதிரைகளுக்கும் தீனி, நிலம் ப்ரௌட் துரையது. எக்ராவுக்கு 40 ஷில்லிங்கு மேனிக்குத் தருமமான வரியும், உழைப்புக்கூலியும், ஆள்மாகாணக்கூலியும் அதில் கலக்கவேண்டிய மாற்றுயர்ந்த எருவுக்கான மண்ணுக்காக 1500 பவுன் ரொக்கமும் மற்றினும் சில்லறைச் செலவுகளும்போக; இவர் போனவருஷத்தில் எக்ரா ஒன்றுக்கு 3 பவுன் இலாபம் நிகரமாகப் பெற்றார். நிலம் முழுக்க நாலடி ஆழம் நமிர்ப்புக்கொள்ளத் தண்ணீர் கட்டப்பட்டிருக்கிறது. நான் பார்த்தபோது வெகு நல்ல சீரிலிருந்தது. புகையந்திரமூலமாய் 9, 10 அங்குல ஆழம் அன்றுழவும் இருந்தது. சாகுபடியெல்லாம் அறுப்புக்குமுன்னேயே அடிக்கு இவ்வளவென்று ஏலம்போட்டுவிடுகிறார். வாங்குகிறவன் அறுப்பறுத்து வைக்கோல் துரும்பு உள்படக் கண்டகண்டு முதலைக் கொண்டுபோகிறான். இந்தப் பரீக்ஷையால் அடித்தரை கொழுமையாயிருக்கும் பக்ஷத்தில் ஆழவுழவினால் வரும் பலன் தெரிகிறது. அவர் முதல் துவக்கும்போது விளைச்சல் இப்போதைக்கப்போ மிகவும் நறுங்கியிருந்தது. இப்போது அவர் ஜீவசத்து எருப்போடுகிறதில்லை. உப்புமண் எருமாத்திரம் எக்ராவுக்கு 3 பவுன் விலைக்கு வாங்கிப்போடுகிறார். இவர் ஆதாயங் கண்டதெல்லாம் கீழ்மண் கொழுமையாயிருந்து, ஆழ்ந்த உழவின் பயனென்று முக்கியமாய்ச் சொல்லவேண்டும். ஆகிலும் அவர் ஜீவசத்து எருப்போடும்படியான காலமும் வரும். இவர் விஸ்தாரமாய்ப் போடுகிற மாற்றுயர்ந்த எரிகந்தக உப்பு இவர் பயிரிட்டு விற்கும் விளைச்சல்களில் மடிந்து அறுவாகும் கொழுமையான பதார்த்தங்களுக்கு ஈடல்ல; ஆகிலும் இன்னும் அநேகவருஷம்வரைக்கும் அவர் இப்போதநுசரிக்கிற முறையால் உயர்ந்த சாகுபடி செய்துவரக்கூடும். எப்படியும் பயிர்க்குணவாக நிலத்திலுள்ள இருப்புபதார்த்தம் அறுவாயிக்கொண்டேவரும். இன்னும் சில வருஷங்க

ளுக்கெல்லாம் இவர் நிலம் உள்ளபடி வெகுவாய் தரம்குறைந்துபோம். இந்தப் பரீக்ஷையை உங்களுக்குச் சொன்னது ஆழ்ந்த உழவினால்வரும் பயனைக் காட்டவே ஒழிய, அவர் முறைப்படி போக்குக்கு ஈடுசெய்து விவசாயத்தில் சேதத்துக்குப் பூரணம்செய்யாத மாதிரியை நீங்கள் அநுசரிக்கும்படியல்ல, ஆழ்ந்தஉழவின் பலன் நிலத்துக்கு ஏற்றபடி இருக்கும். கீழ்த்தரை பீடாயிருந்தாலும் அல்லது அதிலுள்ள மூலபதார்த்தங்கள் பரிணமிக்கும்காலத்தில் பயிர்வளர்ச்சிக்கு ஆகாததாயிருந்தாலும் முதமுதலில் விளையும் குணம் குன்றும். அப்படியின்றிக் கீழ்மண் கொழுமைகொண்டு பயிர்வளர்ச்சியைக் கெடுக்கும் பதார்த்தங்களொன்றும் அதில் இல்லாத பக்ஷத்தில் ஆழ்ந்தஉழவு அதிக திருப்திகரமான பலனைத்தரும். ஆழ்ந்த உழவையும் மேலெழுந்த வாகானஉழவையும்பற்றி நான் பேசிவந்தது முக்கியமாய் இத்தேசத்தில் மேலெழுந்த வாகான உழவினால் வரும் கேட்டை உங்களுக்கு உணர்த்தும்பொருட்டே. ஏர்கட்டி உழுது அல்லது களைகொட்டால் கொத்தி அடிக்கடி நிலத்தைப் பண்படுத்துவதால் அதிக லாபமுண்டு. வரிசைவரிசையாய்ப் பயிரிடுமிடங்களில் இதுவே சுலப சாத்தியம். இத்தேசத்திற்கடுத்ததும் இதுவே. இதைப்பற்றி நான் உங்களுக்குணர்த்தலாம்; இன்னம் காலத்துக்கேற்றபடி வெயிலிலும் மழையிலும் பயிரிடுவதால் வரும் பலனையும், சிலகாலங்களில் சும்மாவிட்டிருந்து பிறகு பயிரிட்டால் வரும் அநுகூலத்தையும், இந்தத் தேசத்துப் பயிரிடும் குடிக்குத் தெரியாத உருளை, கொத்து முதலிய கருவிகளின் உதவியால் வரும் லாபத்தையும்பற்றி உங்களுக்குச் சொல்லலாம். அவைகளைக் குறித்து விரிவாகச்சொல்ல இங்கே இடமில்லை.

எரு இடுதல்.

உழவையும் எருவையும்பற்றி இதுவரைக்கும் பேசினேன். நிலத்துக்குக் கொழுமைதரும் பதார்த்தங்களைப்பற்றி ஒன்றுஞ்சொல்லாமல் விடலாகாது. அதுவிஷயம் மெத்தச் சிறந்தது. நான் அபேக்ஷிக்குமள[illegible] இடமில்லாமல்போனபோதிலும் கொஞ்சம் தொட்டுவிடுவேன். நமக்கு உதவியற்றுப் பாழ்படும் பதார்த்தங்களெல்லாம் வீட்டுக்குச் சமீபத்தில் குவிந்திருந்தால் அது இடைவிடாமல் நமது வாழ்க்கைக்கு அபாயகரமாகும். அதுவே விருக்ஷாதியின் ஜீவனத்துக்கு அவசியம்வேண்டியது. இது சர்வக்ஞனான பகவானுடைய கற்பனை. சேதப்பட்டு அழுகும் ஜீவசத்துக்கள் தரையில் கிடந்தால் அவை அழுகும்போதுண்டாகும் விஷக்காற்றுகள் பிராணிகளுக்கு விரோதமாகையால், அவற்றை மண்ணில் தோண்டிப் புதைக்கவேண்டுமென்று சரீர சுகவிதிகள் சொல்லும். இந்த அழுகின பதார்த்தங்கள்தான் குடியானவனுக்கும் மிகுந்த விலையுள்ளன. மக்கிப்போகும் செடிசெற்றைகளைப்பார்க்கிலும், அழுகும் ஜீவசத்து பிரா-

ணிகளுக்கு அதிக தீங்குசெய்யும். இதனால் இப்படி நாற்றமெடுத்து அழுகிய பதார்த்தங்களைப் பூமியில் புதைப்பது சுகத்துக்கும் சுகம்; குடித்தனக்காரனுக்கும் அநுகூலம். குடித்தனக்காரன் தன்னிலத்துக்கு எருத்தேடும்போது தன் லாபத்தையே பார்க்கிறான். அதிர்ஷ்டவசமாய் அது இந்த விஷயத்தில் ஊரார் சுகத்திற்கும் ஒத்திருக்கின்றது. எருப்போடுவதென்னத்துக்கு? நிலத்தை விளையச்செய்ய நூதனவிவசாயமுறையால் இன்ன நிலத்தில் பயிருணவுக்காக இன்னபதார்த்தம் அதிகம், இன்னபதார்த்தம் குறைவு என்றும், எந்த விளைச்சலுக்கு என்னபதார்த்தம் வேண்டுமோ அது குறைவாயிருந்தால் அதைச் சேர்க்கவேண்டுமென்றும், அப்படிக் குறைவை நிறவுசெய்யாதபக்ஷத்தில் பயிர்பலிக்காதென்றும் தெரிகின்றது. இதை உங்களுக்கு இன்னும் விளங்கச்செய்வேன். நமது பரீக்ஷாநிலத்தில் நூற்றுக்கு விகிதம் சுண்ணாம்பு வெகு சொற்பமென்று உங்களுக்குச் சொன்னேனல்லவா? நெற்றுப்பயிர்போன்ற சில ஜாதிபயிருக்கு அவற்றின் விதை முற்றுவதற்குமுன் அதன் உணவில் சுண்ணாம்பு ரொம்ப சேரவேண்டும். இந்த மாதிரிப் பயிர் இந்த நிலத்தில் அதிக சுண்ணாம்பெருவிட்டுச் செய்தாலொழிய தேறுவது கஷ்டம்.

விளைந்தபயிரில் ஒரு பாகத்தைக் கொளுத்திச் சாம்பலை மூலபதார்த்தங்களாகப் பிரித்துப்பார்த்தால், அது நிலத்திலிருந்து கிரகித்த உணவில் தாதுதிரவியம் இன்னதென்றும், அந்தத்திரவியம் இந்த விளைச்சலினால் பூமியில் குறைவுபட்டதற்குப் பதில் இவ்வளவு சேர்க்கவேண்டுமென்றும் நாம் அறியலாம். இங்கிலாண்டுதேசத்தில் கோதுமை, வாற்கோதுமை, புல்முதலிய விளைச்சலுக்கு இன்னவித விளைச்சலுக்கு இன்னவித பதார்த்தம் இவ்வளவு சரியிடை சேர்க்கவேண்டுமென்று அறிந்து விஸ்தாரம் நிலத்துக்கு கொழுமைதரும் பண்டங்களைச் சேகரித்து வைத்திருக்கும் கிடங்குகள் ஏராளமாயுண்டு. ஒரு விளைச்சலுக்கு சவுட்டுமண்மாத்திரம் தேவையாயிருக்கையில், சவுட்டுமண்ணும் நவச்சாரமும் எரிகந்தகமும் இன்னும் பலவிதமான விலையுயர்ந்த பண்டங்களுள்ள எருவை வாங்கிப்போடுவது வீண்; ஆழும்பாழுமென்று அங்கிருக்குங் குடித்தனக்காரருக்கு இப்போதுதான் தோன்றுகிறது.

தன்னிலத்தின் கொழுமை குன்றாமற் காப்பாற்றிக்கொள்ளும் திறமை இந்துதேசத்துப் பயிரிடுங்குடிக்கில்லை. தன்னுடைய அப்பன் பாட்டன் நாளில் நன்றாக விளைந்த பூமி தன்னாளிலும் பலித்துவருமென்று நம்பிக்கொண்டிருக்கிறான். ஒரு லக்ஷ ரூபாயில் எடுத்துச் செலவுசெய்துகொண்டேவந்தால், கையிருப்பு அறுவாய்ப்போகுமென்பது அவனுக்கு நன்றாய்த் தெரிந்தும், அதேவண்ணம் சாகுபடி செய்யச்செய்ய நிலத்தின் கொழுமை குறைந்துபோகுமென்பதுமாத்திரம் அவன் புத்தியில் படுகிறதில்லை. நிலமானது மிகவும் உயர்ந்ததரத்ததாயிருந்தாலன்றி அதில் நஞ்-

செய்பயிரிட்டாலும் புன்செய்பயிரிட்டாலும் பிரதிபோகத்திலும் அதிலுள்ள தாதுக்கள் கடுபட்டுப்போவதினால் போனதுக்குப் பிரதி எருப்போட்டுச் சரிசெய்துகொண்டே வராவிட்டால், வரவர நிலத்தின் சத்தொடுங்கி அது அப்புறக்கெடும். நிலத்திலுள்ள சுண்ணாம்பு, காரமண், எரிகந்தகம்முதலிய பதார்த்தங்கள் அதில் சாகும்படி பண்ணிவிற்கும் பருத்தி, நெல்முதலிய பயிருக்கு உணவாக மாறித் தாக்குத்தாக்காய்ப் பிரதிபோகத்திலும் கடுபட்டுப்போகும். இன்னமும் அந்நிலம் நன்றாக விளையவிரும்பினால், எருமூலமாயும், பாயும் தண்ணீர்மூலமாயும் மேற்குறைந்த தாதுக்களுக்கு ஈடுசெய்யவேண்டும். பயிருக்கு ஊட்டமான தாதுக்கள் வேறுவிதமாய்ப் பூமியில் கலக்கமாட்டாதுகள். சாகும்படி நிலத்தில் மண்ணுக்குள் புதைத்திருக்கும் புல்பூண்டுகளே உழவுமுதலிய தொழில்களால் பறியுண்டு மக்கி மடிந்து, காற்றுமுதலிய பௌதிகவியக்கத்தால் விளைபயிருக்குணவாக மாறும். இது இயற்கையாய் மறைந்திருந்த சில எருப்பொருள்களை வெளிப்படுத்தலே அல்லாமல் நிலத்தைப் பலப்படுத்தும் திரவியங்களைச் சேர்ப்பதல்ல. ஆகிலும் நிலத்தில் சுபாவமாயுள்ள மேற்கண்ட மாதிரி எருத்தான் இத்தேசத்துக் குடியானவனுக்கு ஆதரவு. நிலத்தைக் கரம்பாகவிட்டுக் காற்று வெயில் முதலிய சாதனங்களால் சிறிது உஷ்ணமேறச்செய்கிறான். ஒவ்வொருவேளை கொஞ்சம் உழுது நிலத்தைக் கிண்டிவிட்டு காற்று வெயில் நன்றாயுறைக்கும்படி துணைசெய்கிறான். இந்தக் குடியானவனுக்குத் தன் நிலத்தின்மேல் கருத்தேயில்லை. நானாவித நிலப்பாங்குகளைப்பற்றி அவனுக்கு ஒன்றும் தெரியவே தெரியாது; கருத்தும் வையான். தங்களுக்கு அன்றாடம் கஞ்சிக்ககப்படுகிறவரையில் இப்போதிருக்குஞ் சில்லறைக்குடிகள் இம்மாதிரி செத்தசாகுபடியே செய்துவருவார்கள். இவ்வேழைப் பிழைப்பு இதுவரையும்போல் நீடித்து நில்லாது; காலம் மாறியிருக்கிறது. போன பிரசங்கியில் நான் சொன்னபடி சூயெஸ் கால்வாய் திறவுபட்டிருக்கிறது.

சாகுபடிப் பொருள்களைத் தூரதேசங்களுக்கு எளிதில் அனுப்பும் சாதகங்கள் உண்டாயிருக்கின்றன. நம்ம சில்லறைக் குடித்தனக்காரரெல்லாரும் முட்டத் திவாலெடுக்கவேண்டியதுதான். இப்பொழுதே இவர்கள் ஸ்திதி பரிதபிக்கத்தக்கது. இரண்டுமூன்று காலமழைதப்பினால் இவாள் பாடுகூடப் பாடுதான். நிலத்தைக் கொழுமைசெய்யும் திரவியங்கள் அங்கங்கே விஸ்தாரமாய் மறைந்துகிடக்கின்றன. அவைகளை வெளிப்படுத்தி உபயோகித்துக்கொள்ளும்படி புதிய விவசாயமுறையை இத்தேசத்துப் பயிரிடுங்குடிக்குக் கற்பிக்கவேண்டும்.

சாகுபடி.

சாதாரணமாய்ப் பார்த்தால் இவ்விடத்துப் பயிரிடுங்குடியின் சாகுபடி மிகவும் தரங்குறைந்தது. சாகுபடிகளெல்லாம் மிகவும் கீழ்த்தர விவசாயத்தைச் சேர்ந்தது. ஆதலால்தான் அவை இத்தேச வேளாண்

114549

மைத்தொழிலுக்கேற்றவைகள். இந்தச் சாகுபடிகள் குடியானவன் கையிலும் காலபேதத்தாலும் படும் கஷ்டங்கள் அநேகம்; அத்தனையும் பொறுக்கும். ஆனால் இவை பலித்து ஏக்கரா ஒன்றுக்கு மனிதர்க்கு ஆகாரமாகத் தரும் பலனோ வெகு சொற்பம். இந்தப் பலதானியங்களில் மணிசிறிது, உமியதிகம். உபயோகமற்ற உமிஸாரமான மணிக்கு எத்தனையோ பங்கு அதிகம். சோளம், கம்பு, கேழ்வரகு, தினை, சாமை, வரகு முதலிய தானியங்களைப் பாருங்கள். இதில் யாதேனும் ஒரு தானியத்தைக் கோதுமையுடன் ஒப்பிட்டால் ஒன்றுக்குப் பன்னிரண்டு தாக்காது, அந்தப் பன்னிரண்டு மணியிலிருக்கும் தோலும் புறைகளுஞ்சேர்ந்து ஒரு கோதுமையுமிக்கு ஐந்தத்தனை ஆறத்தனை தாக்கும். இந்த ராஜதானியில் வருஷவாரி கோதுமை பயிரிடுநிலம் 25,000 ஏக்ராவுக்குக் குறைவு. ஆகாரத்துக்கான மற்ற தானியங்களின் சாகுபடியோ 20,000,000 ஏக்ரா. சில நிலம் இந்த உயர்ந்த விளைச்சலுக்கு உதவாதுதான்; ஆயினும் விவசாயமுறையைச் சீர்படுத்தினால் கோதுமை சாகுபடி நிலத்தை எத்தனையோபங்கு பெருக்கலாம். இந்தச் சாகுபடிக்கு வளமான நிலமும், எருவும், பயிர்செய்யுந்திறமையும் வேண்டும். இவைகளைப்பெற நம்மகுடித்தனக்காரனுக்கு நிருவாகமில்லை. அவன் சுளுவான சாகுபடியைப் பார்த்து எருப்போடாமல் வரண்டநிலத்தைக் கரண்டிக்கொண்டுதான் இருப்பான். என்னமறைத்தாலும் இது பொய்யல்ல. பண்ணையைத் திருத்தாமல் வரண்ட தரையில் உயர்ந்தஜாதி தானியம் சாகுபடியாகாது. இதனாலேதான் [illegible], காரோலினா நெல் இவைகளைத் திறப்படுத்தித் தேசமெங்கு விதைகளை அனுப்பி என்னபாடுபட்டும் பலியாமற்போய்விடுகிறது.

உயர்ஜாதிப்பயிரும் உயர்ந்தஜாதி மிருகங்களைப்போல ஸுகுமார வளரவேண்டும். நல்லநிலங்கண்டு எருப்போட்டுச் சீராகப் பண் [illegible] இந்தச் சாகுபடிசெய்தால் பலிக்கும். மற்றதானியங்களைப்போல் [illegible]ணிக் குடியானவன் இதையும் தண்ணீர்தெளித்து விதிப்படியே நடட்[illegible]மென்று கைவிட்டால் ஏறக்குறையக்கூடப் பலியாது. குடியானவ[illegible] ஞாயமான வேளாண்மைமுறை நேராதவரையில் அவன் பழையமாமூல்படி பயிரிடுவதே நலம். திறமான விவசாயத்தினால் பயிராக்கத்தக்கப் பலவித தானியவிதைகளை வீணாக அவன் கையிற்கொடுத்துப் பாழ்பண்ணுவானேன்? குடியானவன் திறமாகப் பண்படுத்தி எருப்போட்டு சாகுபடிபண்ணும் நிலம் கொஞ்சம். இந்த ராஜதானியில் வ[illegible]ரி கரும்பு சாகுபடியாகும் நிலம் 30,000 ஏக்ராவுக்குள்ளேதான். உள்ளபடி பார்த்தால் அது விளையத்தக்க நிலம் விஸ்தாரமுண்டு. அதுக்கு விசேஷமாய் எரு வேண்டும். ஏழைக்குடி என்னசெய்வான்? அதைத் தள்ளி எருத்தேடாப்பயிரை [illegible]. இந்த ராஜதானியில் எந்தக் குடித்தனக்காரனிடத்தாவது ஒரு [illegible] நிலம் மேய்ச்சலுக்கென்று கிடையாது. காலியின் உணவுக்காக எவனாவ[illegible] ஒரு ஏக்ராநிலத்தில் புல்பயிர்செய்து அறுத்

தூலர்த்திப் போரிட்டுவைப்பதுமில்லை. இது நன்றாக யோசிக்கத்தக்கவிஷயம். குடித்தனக்காரன் பயிரிடுவதெல்லாம் அப்போதப்போது அறுவாகிப்போகிறது. இக்கால விவசாய ஒழுங்கின்படி பயிரிட்டுவருகிற இங்கிலாண்டு, ஸ்காட்லாண்டு முதலிய தேசங்களில், உடனே அறுவாகுஞ் சாகுபடி ஒருபங்கும், கையிருப்புக்காக உதவும் சாகுபடி இரண்டுபங்கும் செய்கிறார்கள்.

பண்ணைக்காலி அல்லது ஆடுமாடுகள்.

ஒரு தேசத்தினுடைய விவசாயநிலையை அங்கு வேளாண்மைக்காக வைத்திருக்கும் ஆடுமாடுகளே தெளிவாகக் காட்டும். நாலுஜாதி ஆடுமாடுகளைப்பற்றி நான் சொல்லவரவில்லை. மிருகங்கள் நிறத்தைப்பற்றியே பேசுகிறேன். இந்ததேசம் என்னதான் உஷ்ணப்பாங்காயிருந்தாலும் குடித்தனக்காரன் வைத்திருக்கும் ஆடுமாடுகள் எத்தேசத்திலும் இப்படி கேடுகெட்டிரா. சில வாகானதாவுகளில் காலிகள் சுமாராய் நல்லஸ்திதியிலிருக்கின்றன. மொத்தத்தில் தேசமோரட்டும் பார்க்கும்போது இந்த ஜீவனத்தின் இருப்புஞ் சீரும் சொல்லவழங்காது. உள்ளதை விருத்திசெய்ய முயலாதிருப்பதுதான் இவர்களுக்குள்ள கேடு.

குடித்தனக்காரன் தன் சாகுபடியில் கருத்தற்றிருப்பதுபோல் ஆடுமாடு விஷயத்திலும் விதியைநம்பிச் சும்மாவிருக்கிறான். 70 லக்ஷம் ஆடும், மாடும் ஆடும் இருக்கிற தேசத்தில் அவைகளுக்காக மேய்ச்சல் நிலமாவது, போட்டு வைக்க புல்விளைவுக்காவது குடியானவன் வழிதேடுகிறதில்லை. காம்புவெளிகளிலும், குளக்கரை தண்ணீர்க்கரைகளிலும் அகப்பட்டதை மேய்ந்து நாள்தள்ளும்படி விட்டுவிடுகிறான். ஜனஅடர்த்தியில்லாத சிலசில அநுகூலமானவிடங்களில் பண்ணைக்காலிகள் கொஞ்சம் தெறிப்பாயிருக்கின்றன. ராஜதானியில் பெரும்பாலுமுள்ள ஜீவன்களைப்பார்த்தால் வருஷத்தில் 6 மீ பட்டினிக்கு ஆளாயிருக்கும். இதனாலுண்டாகும் தீமை அதிகம். குடியானவன் மந்தைகளில் வியாதிவெக்கை நீங்காமலிருக்கும். இந்த விஷயங்களைப் பார்த்தாலே நமது வேளாண்மை இன்னபடியிருக்கிறதென்று தெரியவரும். நூதன விவசாயமுறையை அநுசரித்தால் இந்தச் சீர்கெட்ட நிலைமையை முழுக்கவும் மாற்றி, ஆடுமாடுகளுக்கு மேய்ச்சலும் உணவுமுண்டாக்கி, தெறிப்பான ஜாதியை இதரதேசத்திலிருந்து அழைப்பித்துத் தகுந்த ஜாதிகளுடன் கலந்து விருத்திபண்ணினால் நற்பயனைத்தரும். இந்ததேசத்தில் போர்போட்டுவைக்கத்தக்கப் புல்விளைவு குறைவென்றெண்ணுவது பிசகு. இந்த விஷயத்தில் இதுபோல் வளமுள்ளதேசம் வேறில்லை. ராஜதானியில் அநேகவிடங்களில் ஆடுமாடுகளின் உணவுக்குத் [illegible]வியமான புற்பயிர் டன் ஒன்றுக்கு 3 ரூபாய் மேனிக்கு எவ்வளவு வேண்டுமானாலும் பயிரிடலாம். புல்கடவில் கொஞ்சம் முன்யோசனையும் திறமையுமிருக்

தால் அநேகத் துக்குடிகளில் வருஷாந்திரம் பச்சைப்புல்லே பயிரிட்டுப் போடலாம். இத்தனை அநுகூலமிருந்தும் குடித்தனக்காரன் கோடைக்காலத்தில் தனது ஆடுமாடுகளுக்குதவும்படி தனது புன்செய்க்காட்டில் இரண்டொரு ஏக்ரா புல் சாகுபடிசெய்வது ஒருநாளுமில்லாத விபரீதமென்று தனது ஆடுமாடுகளைப் பட்டினியாவதுபோட்டுக் கொல்வானேயொழிய சுகந்தரும்வழியே தேடான்.

இந்தச் சங்கதியை அனாகுறையாய் விடுவது எனக்கு எவ்வளவும் சம்மதமில்லை; ஆகிலும் விதியில்லை.

உழவுகருவிகள்.

இப்போது பண்ணைக்கருவிகளைப்பற்றிப் பேசுவோம். இங்கு விசேஷம்சொல்ல இடமில்லை. கலப்பை, விதைதாவும் மூங்கில்பட்டல், மண்வெட்டி, களைக்கொட்டு என்று இந்தக் கருவிகளை நான் முன் எடுத்துக் காட்டினதிலேயே இந்ததேசத்துக் குடியானவன் வழங்கும் பண்ணைக் கருவிகள் யாவற்றையும் சொல்லிவிட்டேனென்று சொல்லலாம்; சுதேச கலப்பையோ கலைக்காகாது. கலப்பையால் செய்யவேண்டிய தொழில்களை அது செய்யாது; சும்மா மேலேமேலே கிளறி பூமியை முன்னிருந்த நிலையில் விடுமேயொழிய, கீழ்மண் மேல்மண்ணைப் பேர்க்காது. அது பண்ணைத்தொழிலுக்கு ஒரு சொற்ப ஆதாரமேயன்றி அதிக பயனைத் தரத்தக்கதல்ல; நல்லகலப்பை நிலத்தைக்கிண்டி பூண்டுபுல்லின் வேரைக் கிளப்பிவிடும். அவைகளைப் பொறுக்கித் திரட்டி எறிந்துவிடலாம். மேலே வந்திருக்கும் புதுமண் இளம்பயிருக்கான தழைமக்கிய உணவைக் கொண்டிருக்கும். அடியில் புளித்துப்போயிருக்கும் மண்ணை மேலே கிளப்பி வெயிலும் காற்றும் பட அது மாறுதல்பெற்று நிலத்தின் கொழுமைக்குவேண்டிய பதார்த்தங்களுடன் நன்றாய் இணங்கப்பண்ணும். இந்தக் குணங்களெல்லாம் நல்ல கலப்பையால் உண்டாகும். ஆனால் ஏழைக் குடியானவனுக்கு இரண்டுமூன்று ரூபாயிலே கலப்பையைச் சம்பாதித்துக்கொள்வதைவிட்டு 15, 16 போட்டு உயர்ந்த கலப்பைவாங்க என்ன வந்தது என்று ஆக்ஷேபிக்கப்பட்டது. நம்முடைய குடியானவர்களில் அநேகருக்கு 15 ரூபாய் சம்பாதிக்க நிர்வாகமில்லை. சிலகாலங்களில் வெகுபெயர் தங்களுக்கும், பெண்சாதிபிள்ளைக்கும் உண்ணக்கூழும், உடுக்கத்துணியும், இருக்கநிழலும் தேடிக்கொண்டு, மானத்தோடு பிழைப்பதே கஷ்டமாய்ப்போம். இது எனக்குத் தெரியும்; உங்களுக்கும் தெரிந்ததுதான். ஆனால் அவர்களுக்குக் கதியில்லையே என்று அவர்கள் சுதாரிக்கிறவரைக்கும் நாம் சும்மாவிருக்கலாமா? எத்தனையோ குடித்தனக்காரருக்குக் கைகளில் உண்டாயிருக்கும் பயனடையத்தக்க விவேகமும் முயற்சியும் அவர்களுக்கில்லை. புதிதாய் ஒன்று செய்வதும் அவர்களுக்கு வெறுப்பு.

அதிகமாய் முயன்று புத்தியைச் செலுத்துவதும் அவர்களுக்கு ஆகாது. நாம்
இங்கே யோசிக்கவேண்டியது கருவியின் விலையைப்பற்றி அல்ல. அது
செய்யுங்காரியத்தின் விலையைப்பற்றியே. 15 ரூபாய்போட்டு வாங்கும்
கலப்பையைக்கொண்டு செய்யும் வேலைக்குப் பிடிக்கும் செலவு ஹிந்து
குடியானவன் தன் மட்டிக்கலப்பையைக்கொண்டு அவ்வளவு வேலைசெய்
தால் பிடிக்குஞ்செலவிலும் கொஞ்சம். சீமைக்கலப்பையைக்கொண்டு
ஒருசால் உழுவது நாட்டுக்கலப்பையைக்கொண்டு இரண்டுசால் அடிப்ப
துக்குச் சரி. அதாவது: சீமைக்கலப்பையைக்கொண்டு ஓரேர் கட்டி ஓர்
ஏக்ரா நிலம் உழுதால் அது பெயர்க்கும் மண் நாட்டுக்கலப்பையைக்கொ
ண்டு அதேநிலத்தில் ஒருசால் உழப்பறியும் மண்ணைக்காட்டிலும் இரட்
டிப்பு. நாட்டுக்கலப்பையில் பெயரும் கட்டி முக்கோணவடிவாய் முனை
முன்னேக்கியிருக்கும். சீமைக்கலப்பையால் பெயரும் கட்டி சச்சதுரமாய்
முன்சொன்ன கட்டிகளிரண்டுக்குச் சமமாயிருக்கும். முன்னையது நிலத்
தை முழுதும் பேர்க்காமல் வரம்புவரம்பாய் விட்டுவிடும். பின்னயதோ
சீராவாய்ப் பேர்த்துக் கீழ்த்தளம் ஒரேசமமாய் ஒத்திருக்கச்செய்யும். நாட்
டுக்கலப்பையைக்கொண்டு ஒரு சாலடிப்பதில் விடப்படும் வரம்புகளை
முறிக்க மீளவும் குறுக்குச்சாலடிக்கவும்வேண்டி வருகிறது. சீமைக்கலப்
பையினால் ஒருசால் உழப்போந்த நிலத்திற்கு நாட்டுக்கலப்பையினால்
இரண்டுசால் அடிக்கவேண்டும் இதனால் என்ன அறிகிறோம். ஒரு சீமைக்
கலப்பையும், இரண்டு குண்டையும், ஒரு ஆளும் வைத்து நடக்கும் வேலை
யைச்செய்ய நாட்டுக்கலப்பைகள் இரண்டும், இரண்டேர்மாடும், இரண்டு
ஆளும் வேண்டும். ஆனால் சீமைக்கலப்பையைக்கொண்டு வேலைசெய்ய
ராஜதானி ஜில்லாக்களில் அநேகவிடங்களிலிருக்கும் மாட்டைவிட
திறமான மாடுகள் வேண்டும். பல்லாரி, கோயம்புத்தூர், இன்னம் இரண்
டொரு தக்குடியிலிருக்கும் மாடுகள்போலிருந்தால் போதும். வேலைத்
திறத்தினால் சீமைக்கலப்பையை இழுப்பதில் பாரந்தோன்றாது. அரை
வாசி வேலைசெய்யவும் ஆகாத நாட்டுக்கலப்பைக்கு அது பாரமல்ல. இதை
நான் பலதரம் விசையளக்கும் யந்திரமூலமாய்ப் பரீக்ஷித்திருக்கிறேன்.
இந்த நல்ல கலப்பையை இழுக்க இரண்டு எருதுக்கு 65 ரூபாய் வைத்த
போதிலும், கலப்பையும் மாடுமாகச் சேர்ந்து ஒரு ஏருக்கு 80 ரூபாய்
தான் முதல்வைக்கவேண்டும். இப்போது குடியானவனுக்கு ஜதை ஒன்
றுக்குக் குறைந்தபக்ஷம் 50 ரூபாய் வைத்தாலும் இரண்டுஜதை மாட்டுக்
கும் ஏருக்கும் 100 ரூபாய்க்கு மேலே பிடிக்கும். இதற்கீடாக சீமைக்
கலப்பை உழவுக்கு ஓரேர் போதும்; 80 ரூபாயே பிடிக்கும். மேலும் இத்
தேச மட்டி உழவில் கைப்பாடதிகம். சீமைக்கலப்பையால் இரண்டுபங்கு
மண் பெயர்வதுமன்றி அது உழும் நிலப்பரப்பும் அதிகம். இது துரைத்
தனத்தார் பரீக்ஷைக்காக வைத்திருக்கிற விவசாயநிலத்தில் சோதித்துச்
சோதித்துப்பார்த்துத் தீர்ந்த சங்கதிதான். நாட்டுழவு மாட்டைவிட இந்த

உழவு மாட்டுக்கு ஊட்டம் தண்டியாகவேண்டும். ஆனால் நாலுமாட்
டைவைத்துக் காப்பாற்றுகிறவனுக்கு இரண்டுமாட்டை ரக்ஷிப்பதென்ன
வருத்தம். கலப்பையும் உழவையும்பற்றி இவ்வளவு வளர்த்திப் பேசின
படியால் மீந்த இரண்டுமூன்று கருவிகளைக்குறித்து அதிகஞ்சொல்லப்
பொழுதில்லை. மண்வெட்டி ஒன்றுதவிர மற்றக் கருவிகள் வேலை சுளு
வா வேண்டும்போது செய்துகொள்ளலாம். ஆனாலும் அவை திறம்போதா
தவை, வேலைகொள்ளும். இந்தியாவில் கூலிவேலை மலிவாயிருக்கிற
வரையில் கருவிகளையும் உபகரணங்களையுங்கொண்டு நூதன ஒழுங்கின்
படி விவசாயத்தொழில் சாயப்போகிறதில்லை. ஆயினும் இவைகளை
அதிகமாகக் கையாண்டால் சொற்பவிரயத்தில் அதிகத் தேற்றமுண்டாய்
அவைகளாலாகும் வேலை இப்போதைய வேலையைவிடத் திறமாயிருக்கும்.

கட்டிடங்கள், மரங்கள், வேலிகள்.

1. இவைகளைப்பற்றி நான் விசேஷம் சொல்வதற்கில்லை. வெளிஜில்
லாக்களில் கிராமங்களிலிருக்கும் ஸ்திதி பார்க்கவழங்காதென்பது உங்க
ளுக்குத் தெரியாததல்ல. இந்தக் கிராமங்களில் வீடுகளைப்பார்த்தால்
ஒரு ஒழுங்குமில்லாமல் குட்டுகுட்டாய் குறக்குடிசைகளைப்போல் நெ
ருங்கியிருக்கும்; புலபுலவென்று விழுந்துபோகத்தக்கவைகள். அக்குடி
சைகளின் சுவர்கள் பச்சைவெட்டுக் கல்லினாலும் மண்ணினாலும் எடுத்
திருக்கின்றன. அல்லது மூங்கிலும் தழையும் சேர்த்து இணைக்கித் தடுத்த
வைகள். கூரையும் அத்தனை அழகாகவே ஓடும் தாம்பும் தழையும் போட்டு
மூடியது. அதில் குடியிருக்கும் ஜனங்களுக்கோ தேகசுகத்தைப்பற்றிய
ஏற்பாடு ஒன்றும் லக்ஷியமில்லை. இந்த ராஜதானி ஜில்லாக்களில் எந்தத்
திக்கில்போய்ப் பார்த்தாலும் கிராமங்கள் இதேநிலையில்தான் தென்படு
கின்றன. எங்கேபார்த்தாலும் ஜீரணமாய்ப் பாழடைந்த தோற்றந்தவிர
வேறில்லை. மேற்குத் தெற்கு கனாதுறைகளையடுத்த இடங்களில் சற்றுப்
பார்க்க வழங்கும். இங்குமங்கும் துண்டுதுண்டாய் விவசாயநிலங்க
ளிருப்பது இந்தப் பார்க்கவழங்காப் பாழுந்தோற்றத்திற்கு சற்றுப் புரியா
யந்தான். ஆனால் இந்த ராஜதானியிலுள்ள பயிரிடத்தக்க பூமியில் நூற்
றுக்கு ஐந்து ஏக்ரா விகிதங்கூட சாகுபடியாகவில்லையென்று எண்ண
லாம். குடியானவனுக்குள்ள இடவசதிகளைப்பற்றி இத்தேசத்தில் ஏற்ற
வைக்கென்று சொல்லும்படியானது ஒன்றுமில்லை. காற்றுமழைகாலத்
தில் ஒரு கூரையின்கீழேயே குடியானவன் அவன் சமுசாரம் அவனைச்
சேர்ந்த யாவத்துச் சொத்துகளும் ஒதுங்கியிருக்கப் பெரும்பாலும் இடம்
போருகின்றது.

வருஷத்தில் பாதிநாள் இவன் பயிர்த்தொழிலெல்லாம் வெளியிலே
நடத்த காலம் அநுகூலிக்கின்றது. இப்படி ராஜதானிமுழுக்க இல்லா

விட்டாலும் பெரும்பாலும் நடப்பது பிசகன்று. மற்ற ஆறுமாசத்திலோ அதிலும் கார் அறுப்பு மழைகாலத்தில் கண்டுமுதலெல்லாம் நனைந்து குடியானவனுக்கு பெருவாய்ச் சேதமுண்டாகும். இப்படிச் சேதம் வருமென்கிற பயத்தினால் விளைந்த தானியத்தை உடனே குறைந்தவிலைக்கு விற்க நேரிடும். இப்படி இருப்பிடம் வசதியில்லாத குறை, குடித்தனக்காரனிடத்தில்மாத்திரமல்ல, தேசசமுதாயத்துக்கும் உண்டு. கிரமமாக கட்டிய இருப்பிடம் வேண்டுமென்பது ஞானமுள்ள ஜனங்களின் புத்தியில் படுகிறவரையில் ஏழைக்குடியின்பேரில் நாம் தோஷம்சொல்லலாகாது. ஆகிலும் வசதலும் மழையுமுள்ளகாலத்தில் தன் குடும்பத்துக்கும் தன் ஆடுமாடுகளுக்கும் சௌக்கியத்துக்கேற்றபடி வசதியாக இடம்தேடிக்கொள்வதினால் ரொம்ப குணமுண்டென்பதைக் கையில் உண்டான குடியானவனுக்கு உணர்த்தவேண்டியது. இந்த விஷயத்தில் சிராகச் செலவிடும் முதலுக்கு வட்டி கட்டிவராதென்று எண்ணவேண்டாம். ஏறக்குறைய வருஷந்தோறும் தப்பாமல், அதுவும் பயிர்த்தொழிலுக்கு ஆள்கள்வேண்டும் நல்லதருணத்தில், சுரத்தினால் பீடிக்கப்பட்டுத் தன் குடும்பத்தில் வேலைசெய்யும் கைகள் வெகுவாரங்கள் சும்மாயிருக்குமே. அப்படி வராமல் காப்பது லாபமல்லவா? மழையில் நனைந்து ஆடுமாடும் சாகாமல் காத்தால் மேற்படி வட்டிக்கு ஈடுகட்டாதா? இந்த ராஜதானியில் பலவிடங்களிலும் ஒரு ஜில்லாவிலுள்ள நிலமிராசுதாரர்களெல்லாம் கிராமங்களிலேயே சேர்ந்து இருக்கவேண்டுமென்னும் நிர்ப்பந்தம் இப்போதில்லை. விவசாயத்தொழில் தேர்ந்த இதரதேசங்களில் குடித்தனக்காரர்கள் இருப்பதுபோல, நமது ராஜதானியிலும் வெகுஇடங்களில் குடித்தனக்காரன் தன் நிலத்திலேயே குடிகொள்ளாமைக்கு வேறு ஏதொன்றும் காணோம்.

2. எப்படி இடவசதியில்லையோ அப்படியே இத்தேசத்தில் வேலிகளும் நிறம்போதாது. இன்னும் இக்குறை இப்படியே இருக்கவேண்டுமென்பதற்கு ஞாயமில்லை. தான் ஒன்றும் கையறுத்துக்கொள்ளாமல் கவனம்வைக்காமல், போட்டவுடன் சுபாவத்தில் பயிராய் தண்டியாய் விறகுக்கும் உதவத்தக்க செடிசெட்டுகள் குடியானவனுக்கு வேண்டுமானால் எத்தனையோ உண்டு. விறகு இந்த வழியாய் கிடைத்தால் இப்போது எரிதுரும்பாக அவன் எரிக்கும் விராட்டி கூளம்முதலிய பதார்த்தங்களை விளைச்சலுக்கு எருவாக்கலாமல்லவா? தன் நிலத்தை வேலியடைத்திருந்தால்தான் மனசுக்கேற்றபடி மாடுமேய்க்கவேண்டும் என்கிற வியாஜத்தால் குடியானவனுக்கு வேலையைக் கழப்ப இடமிராது. இந்தியாவில் மரங்கள் சுலபமாய்ப் பயிராகிறதுபோல் இதரதேசங்களில் ஆகிறதரிது. அப்படியிருந்தும் நமது ராஜதானியிலுள்ள 3 கோடியின் சில்லரை ஏக்ரா நிலத்தில் 5 லக்ஷம் ஏக்ராவுக்கு அதிகமில்லை, தோப்புகளும் பழத்தோட்டங்களுமுள்ளது.

ஒவ்வொரு குடித்தனக்காரனுக்கும் ஒரு துண்டுநிலத்தில் பழவகைகளும் விறகுதரும் மரங்களும் தனக்கென்றிருக்கவேண்டும். இவ்விரண்டு ஜாதிமரங்களும் தனஇஷ்டம்போல் சம்பாதித்துக்கொள்ள விஸ்தாரமுண்டு. அவைகளை வைத்துப் பயிராக்குவதற்கும் அதிகம் பிடிக்காது. ஒரு புஞ்சைக்கோல் சவுக்குமுதலிய விறகுதரும் மரங்களை பயிரிடச் சோம்பி, குடியானவன் ஒருநாள் பிரயாணதூரத்திலுள்ள தன் மனதுக்குப் பிடித்த காட்டுக்கு அடிக்கடி போய் விறகுகொண்டுவருவது நலமென்றெண்ணுகிறான். இப்பொழுதுதான் ஆறுமாசத்துக்குக்கீழ் நான் ஓரிடம்போய்ப் பார்த்தேன். அதுள்ள ஜில்லா ஒட்டுக்கும் விறகுக்காகும் திறமான (ஔஸ்திரேலியா) மரங்கள் அதிவிரைவாய் வளரும். நிலவரியோ ஏக்ராவுக்கு ஒரு ரூபாய் கூட இல்லை. அப்படியிருந்தும் அந்த ஜில்லா முழுதிலும் ஒரு மரத்தையாவது வைத்துப் பயிரிடுங் குடித்தனக்காரனில்லை. எல்லாரும் தூரத்தில் எட்டாக்கையிலுள்ள காட்டிலிருந்து விறகுதேடிக்கொள்ளுகிறார்கள்.

பண்ணையாள், குடித்தனக்காரன்.

3. பண்ணையாளைப்பற்றியும், இந்துகுடித்தனக்காரனைப்பற்றியும் சிறிது சொல்வதுதான் பாக்கி. போன பிரசங்கத்தில் சொன்னவண்ணம் இத்தேசத்தில் பண்ணையாளினுடைய ஸ்திதி ரொம்ப கோரமானது. அவனுக்கு வேலையும் வரிசையா அகப்படுகிறதில்லை; கூலியும் சொல்பம்.

அநேக இடங்களில் இப்பண்ணையாள் படியாள்தான். அவன் அதிகாலையில் வந்து பொழுதுபட்டும் வேலைசெய்யவேண்டும். எஜமான் இஷ்டப்படி மழையிலும் வெயிலிலும் உழைக்கவேண்டும். சாதாரணமாய் எஜமான் கொடுக்குங்கூலியோ அவனுக்கு இஷ்டமான மட்டத்தானியம். சென்னைக்கு அருகாமையிலுள்ள சில ஜில்லாக்களில் பண்ணையாளுக்கு வருஷாந்தரம் கூலி 7 ரூபாய்; நித்தியம் மூன்றுவேளைச் சோறு; வருஷத்துக்கு ஒரு துணி. பண்ணையாள் வியாதியாய் விழுந்தானோ அவன் வரும்படியோச்சு. தன் வழியைப் பார்த்துக்கொள்ளவேண்டியதுதான். நல்ல செழிப்பான ஜில்லாக்களில் பண்ணையாளுக்கு தினக்கூலி இரண்டணா அளவுக்கு மேலில்லை. சென்னபட்டணத்தை அடுத்த இடங்களில் வேலைசெய்யும் ஆளுக்கு அற்றைக்கூலி மூன்றணா. இதிலும் பாவம், ஞாயிற்றுக்கிழமை தவிர இந்த உழைப்பாளிகளில் அநேகர் வருஷத்தில் ஒரு ம[illegible]லிய வியாதியால் வரும்படி இழந்துவிடுகிறார்கள். ராஜதானி முழுக்கத் தூக்கிப்பார்க்கும்போது, பண்ணையாளுக்கு சராசரி வரும்படி நித்தியம் இரண்டணா. இதைக்கொண்டுதான் சாதாரணமாய் தன் சமுசாரத்துக்கு வேண்டியதெல்லாம் வாங்கிக்கொள்ளவேண்டும். இவர்களில் வெகுபேருக்கு ஒருநாளைக்கு ஒருவேளைக் கஞ்சிக்குமேல் கிட்டாதென்பது கேட்பானேன்? ஒரு ஜில்லாவில் பஞ்சம் அல்லது கொள்ளைவியாதி நேரிடும்போது இந்த வகுப்பார் கும்பல்கும்பலாய் மாண்டுபோவது ஆச்சரியமல்ல.

இந்தப் பண்ணையாள் என்னக்ஷேமத்தைக்கோர ஆசையுண்டு? பயிரிடும்முறை திருந்திச் சீர்ப்பட்டாலொழிய இவன் கஷ்டம் விடியாது. சாதாரணமாய்க் குடித்தனக்காரன் இப்பொழுது செய்கிறபடி கேவலம் மட்ட தானியங்களையே பயிரிடுவதைக் கைவிட்டுக் கரும்பு, கோதுமை, புகையிலை முதலிய உயர்ந்தவைகளையும் சாகுபடிசெய்தால்தான் பண்ணையாளுக்கு உயர்ந்த கூலிகொடுக்கக் கட்டிவரும். இப்போதாகும் அற்பமானகண்டு முதல் பண்ணையாளுக்குக் கூலிகொடுக்கப்பற்றாது. வேளாண்மை பலிக்கின்ற ஜில்லாக்களில் குடித்தனக்காரன் ஸ்திதி பண்ணையாளின் ஸ்திதிக்குப் பெரும்பாலும் மேற்பட்டதல்ல. 10 ஏக்ராவுக்கு உட்பட்ட மிராசுதாரர்களே அதிகம். அவ்வளவு நிலமுள்ள ஒரு குடித்தனக்காரனுக்கு நிகரவரும்படி மாசம் 6 ரூபாய்க்கு மேற்படாது. இது சென்னைபட்டணத்தில் ஒரு குதிரைக்காரன் சம்பளம். இந்த நிலையில் உள்ளவர்கள் தாங்களே பண்ணையாள் ஒப்பந்தமாகாமல் என்னசெய்வார்கள்? தற்காலஸ்திதியில் அவர்கள் பிழைப்பு ஆற்றமாட்டாப் பிழைப்பே. உண்டான மிராசுதாரரிடத்திலும் நாம் அதிகபலனை எதிர்பார்ப்பதற்கில்லை. அவர்களுக்கு மடமையும் குருட்டுபக்தியும் அதிகம். இப்போது தலையெடுக்கும் ஜனங்களால்தான் ஏதாவது நலம்பிறந்தால் பிறக்கும். இந்தத் தேசத்து விவசாயமுறை மறுபிறப்பெடுத்து சீர்பெறவேண்டுமானால் இங்குள்ள பெரிய பட்டணங்களில் கூடியிருக்கும் சுதேச தனவான்களின் ஆலோசனையையும் திரவிய உதவியையும் பெற்று, இப்போதிருக்கும் குடித்தனக்காரருடைய பிள்ளைகளால்தான் ஆகவேண்டும். இப்பொழுதே நிலம் குடித்தனக்காரர் கையைவிட்டு விறுவிறுவென்று மாறுகிறது; ஆனால் இது நல்லதுதான். விவசாயத்தொழிற்குப் புதுரத்தம் ஊறவேண்டும். இப்போதிருக்கிற மிராசுதாரர்களும் குடித்தனக்காரர்களும் தங்கள் கடமைப்படி நிலத்தைச் சீர்ப்படுத்த மனமில்லாமலும் சக்தியில்லாமலும்போனால், அந்தக் கடமையைப் பணிக்காய் நிறைவேற்றுபவருக்கு அவர்கள் இடம்விடவேண்டியதுதான். நாகரிகமுள்ள தேசங்களில் விவசாயத்தொழில் இருக்கும் நிலை இத்தேசத்திலும் ஏற்படவேண்டியதுதான். கல்வியிற்றேர்ந்த சுதேசப்பிரபுக்களிடத்தில் பயனற்றதாய்க் காணப்படுகிற திரவியமும் விசேஷஞானமும் இந்த விவசாயத்தொழிலுக்குச் சாதகமாகத் துணைநிற்கவேண்டும்.

முற்றிற்று.

114948